Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 275 | ஞாயிற்றுக்கிழமை 28 ஓகஸ்ட் 2022 | ஆவணி 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=




"அவையள் காலத்தைக் கடத்திற சங்கதியே, ஐயாவுக்கு காலம் கடந்த பிறகுதான் விளங்கியிருக் கெண்டால் பாருங்கோவன்"

மன்னார், கிளிநொச்சியில்

# இந்தியாவுக்கு வழங்கப்பட்டது தற்காலிகமான அனுமதியே

## மக்கள் எதிர்ப்புக்களின் பின்னணி ஆராயப்படும் அமைச்சரவை முடிவு மீள்பரிசீலனை செய்யப்படலாம்



**கொழும்பு, ஓகஸ்ட் 28**

மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையச் செயற்றிட்டங்களுக்கு அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்துக்குத் தற்காலிக அனுமதியே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்கான எதிர்ப்புக்களின் பின்னணி குறித்து ஆராயப்படும். தேவைப்படின் அமைச்சரவையின் முடிவு மீள் பரிசீலனை செய்யப்படும் - என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்தார். 11 ▶

## தெல்லியூர்

### துர்க்கை அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 28

வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை துர்க்கைஅம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் திருவிழா நடைபெற்றது. இந்த ஆண்டு சிறப்பாக நடைபெறவுள்ள பெருந்திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமையவே பெருந்திருவிழாவுக்கான விசேட ஏற்பாடுகள் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 11 ▶

## சாதாரண குடும்பமொன்றின் மாதச் செலவு ரூ.110,000

### பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

கொழும்பு, ஓக. 28

நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளமையால் சாதாரண குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் நுகர்வுக்கான செலவு ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ள 11 ▶

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபையில்

## அரைவாசிப் பணியாளர்கள் வேலைக்கு 'லாயக்கற்றோர்'

### அமைச்சர் காஞ்சன மீண்டும் சீண்டல்

கொழும்பு, ஓக. 28

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம், இலங்கை மின்சார சபை என்பவற்றின் பணியாளர்களில் அரைவாசிப் பேர் திறமையற்றவர்கள் 11 ▶

## அமிர்தலிங்கத்தின் பிறந்ததினம்: வட்டுக்கோட்டையில் நேற்று!



யாழ்ப்பாணம், ஓக.28

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 95 ஆவது பிறந்த தின நிகழ்வு வலி.மேற்கு பிரதேச சபையின் பிரதான மண்டபத் 11 ▶

குடும்பத் தகராறில்

## மூன்று மாதக் கன்றுக்குட்டி கல்லால் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், ஓக. 28

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடியில் குடும்பத்தகராறு காரணமாக 3 மாதங்கள் நிரம்பிய கன்றுக் குட்டி நேற்று அடித்துக் கொலை செய்யப்பட்ட கொடூரம் அரங்கேறியுள்ளது. 11 ▶

## சீனக்கப்பல் இன்னமும் இந்து சமுத்திரத்திலேயே!

### இந்தியா கூடுதல் கண்காணிப்பு

கொழும்பு, ஓக. 28

சீனாவின் சர்ச்சைக்குரிய அதிதொழில்நுட்ப கண்காணிப்பு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு தெற்கே, இந்து 11 ▶

## அரசியல் தீர்வினை வழங்காமல் அரசு காலத்தைக் கடத்துகின்றது!

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் விசனம்

யாழ்ப்பாணம், ஓக. 28

மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் காலத்தைக் 11 ▶

## மகாநாயக்கர்களை சந்தித்த சீனத் தூதுவர்

### இந்தியத் தூதுவரின் கண்டிப் பயணம் ரத்து

கொழும்பு, ஓக. 28

இலங்கைக்காக சீனத் தூதுவர் ஸி ஸென்ஹொங் கண்டிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். [illegible] இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயால் திட்டமிடப்பட்டிருந்த கண்டிக்கான பயணம் திடீரென இரத்து [illegible] 11 ▶



சந்நிதியான் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

விரிவு - பக். 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இறக்குமதித்தடை அவசியம் தேவை

## மத்திய வங்கி ஆளுநர் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 28

அத்தியாவசியமற்ற 305 பொருள்களின் இறக்குமதியை தற்காலிகமாக இடை நிறுத்துவது இந்த நேரத்தில் அவசியமான நடவடிக்கை என்று மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வரையறுக்கப்பட்ட அந்நியச் செலாவணி எதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்க வேண்டும். எண்ணெய், மருந்து, எரிவாயு உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்வதா அல்லது அலைபேசி, கார், தொலைக்காட்சி ஆகியவற்றை இறக்குமதி செய்வதா என சிந்திக்க வேண்டும்.

அத்தியாவசிய விடயங்களுக்கு அந்தப்பணம் பயன்படுத்தப்பட்டால், இது போன்ற சூழ்நிலையில் மக்களுக்கு பெரும் வசதியாக இருக்கும். அதனால்தான் அத்தியாவசியமற்றவை தடை செய்யப்பட்டன. இவை தற்காலிகமான விடயங்கள். சில தொழில்கள் பாதிக்கப்படும் என்பதை அறியாமல் இது செய்யப்படவில்லை. ஆனால் இந்தக் கட்டத்தில் முக்கியமான விடயம், வரையறுக்கப்பட்ட வளங்களை மிகவும் திறமையான முறையில் பயன்படுத்துவதாகும். இந்த நிலைமை தீர்க்கப்பட்டவுடன், கட்டுப்பாடுகளை முறையாக இல்லாமல் செய்ய முடியும் -என்றார். (ம-14-இ)

### பொருள்களின் இறக்குமதித்தடை வாழ்வாதாரத்துக்கு அச்சுறுத்தல்

#### சோஸலிச கட்சியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 28

300க்கும் மேற்பட்ட பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை, மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இந்த இறக்குமதித் தடையால் பல துறைகளில் லட்சக்கணக்கானோர் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என்று சோஸலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரயில்களுக்கான சிக்னல், உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யத் தடை விதித்துள்ளதால், ரயில் விபத்துகள் குறித்து சிந்திக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இரும்பு, அலுமினியம், தண்ணீர் குழாய்கள் உள்ளிட்ட கட்டுமானத் துறையில் உள்ள பல உபகரணங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதால், பெரிய அளவிலான கட்டுமான நிறுவனங்களின் செயற்பாடுகள் 60 சத வீதம் குன்றந்துள்ளன. அத்துடன் காகிதம், அட்டை, செய்தித்தாள் மற்றும் புத்தகத்துறைகளில் வேலைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், அறுவடை இயந்திரம் உள்ளிட்ட பல விவசாய உபகரணங்களின் தடை பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும் -என்றார். (ம-14-இ)

### விவசாயம், மீன்பிடி, சுற்றுலா

## முதன்மைத் துறைகளுக்கு 4.89 வீதமே நிதி ஒதுக்கீடு

#### விஜித ஹேரத் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவுகளுக்காக 11.4 வீதமான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், கமத்தொழில், மீன்பிடி, சுற்றுலா ஆகிய துறைகளுக்கு 4.89 வீதமான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சிங்கள வாரப்பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார நெருக்கடியில் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கும் நாட்டில் அறிவுள்ள உணர்வுபூர்வமான ஜனாதிபதி ஒருவர் இப்படியான வேலையை எந்த வகையிலும் செய்யமாட்டார். தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நிலையில் கமத்தொழில், மீன்பிடி, சுற்றுலா ஆகிய துறைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த நிலையில், பொருளாதாரத்தை மீள் உருவாக்கம் செய்வதற்குப் பதிலாக, பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசியல் பிரதானிகளை பாதுகாத்து, அடக்குமுறையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவே பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பயங்கரவாதம் இல்லாத சந்தர்ப்பத்தில் கண்ணீர் புகைக்குண்டுகள், தோட்டாக்கள், நீர்த்தாரை தாக்குதல் வாகனங்கள் ஆகியவற்றுக்கே அதிகளவில் செலவிடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மாத்திரமல்லாது, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதே வழியில் பயணிக்கின்றார். இது எந்த வகையிலும் நாட்டுக்கு உகந்ததல்ல. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் எந்த அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணரவில்லை -என்றார். (ம-14-இ)

## ஜனாதிபதியின் சலுகை கோத்தாவுக்கு இல்லை!

#### முன்னாள் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 28

அரசமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் எதுவும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இல்லை என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோத்தாபய ராஜபக்ச தனது பதவிக்காலம் முடிந்து ஓய்வு பெற்ற ஜனாதிபதியல்ல, அவர் சேவையிலிருந்து விலகிய ஜனாதிபதியாவார்.

இவ்வாறு சேவையில் இருந்து விலகிய ஜனாதிபதி ஒருவருக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகள் எதுவும் கிடையாது. இதன்படி, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் உள்ளிட்ட எந்தவொரு சிறப்புரிமையும் கோத்தாபய ராஜபக்சவுக்கு இல்லை -என்றார்,

அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில் இடம்பெற்ற அலைபேசி உரையாடலின் போது ஜனாதிபதி ரணில் இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அறிவித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ம-14-இ)

### ரணிலின் வீடு எரிக்கப்பட்ட விவகாரம்

## நாட்டைவிட்டு வெளியேறினார் சஜித்தின் சகோதரி துலஞ்சலி

கொழும்பு, ஓக. 28

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சகோதரி துலஞ்சலி பிரேமதாஸ குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு எரிக்கப்பட்டமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் அவரிடம் விசாரணை மேற்கொண்டனர். சம்பவ தினத்தன்று அவர் அங்கு இருந்தார் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் அவர் தனது குடும்பத்தினருடன் நேற்று நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## எம்.பிக்களின் வீடுகளை எரியூட்டியமை: மேலும் எட்டு சந்தேகநபர்கள் கைது

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னரான வன்முறைகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை எரியூட்டிய குற்றத்துக்காக 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யூ.கே.சுமித் உடுகும்புர, பிரேமநாத் சீ தொலவத்த ஆகியோரின் வீடுகள் மற்றும் வாகனங்கள் உள்ளிட்ட சொத்துகளுக்கு எரியூட்டியமை மற்றும் சேதம் விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காகவே 8 சந்தேகநபர்கள் குருநாகல் மற்றும் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 19 முதல் 53 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் சந்தேகநபர்கள் வெலிவிட்ட, ஹோமாகம, தரம்பொல மற்றும் பன்லியத்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் குருநாகல் மற்றும் கடுவெல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வளர்ச்சிக்குத் துணையாகும் அதியுயர் வீதங்களைத் தரும்

## சம்பத் வங்கியின் Fixed Deposits

| 300 நாட்களில் | 200 நாட்களில் | 100 நாட்களில் |
|---|---|---|
| 22% | 21% | 20% |
| (22.41% வ.வ.வீ.) | (21.99% வ.வ.வீ.) | (21.50% வ.வ.வீ.) |

பாதுகாப்புமிக்க முதலீட்டின் மூலம், உத்தரவாதமிக்க உயர் வட்டி வீதங்கள்!

குறைந்தபட்ச வைப்பின் பெறுமதி ரூ. 1 மில்லியன்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சம்பத் வங்கிக் கிளையை நாடுங்கள் அல்லது 0112303050 இனை அழையுங்கள்.

*நிபந்தனைகள் உண்டு.

Sampath Bank Fitch Ratings AA- (lka)

**சம்பத் வங்கி**
எதிர்காலத்தின் முன்னோடிகள்

0112 30 30 50 www.sampath.lk

Sampath Bank PLC- Company PQ 144 Sampath Bank is a licensed commercial bank supervised by the Central Bank of Sri Lanka.

## நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்



**நிலையான வைப்பு வட்டி வீதங்கள் 2022.07.18 முதல்**

| காலப் பகுதி (மாதம்) | சிரேஷ்ட பிரஜை அல்லாத | | | | சிரேஷ்ட பிரஜை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாதாந்தம் | | முதிர்ச்சியின் போது | | மாதாந்தம் | | முதிர்ச்சியின் போது | |
| | வ.வ.வீ [1] | வ.வி.வ [2] | வ.வ.வீ [1] | வ.வி.வ [2] | வ.வ.வீ [1] | வ.வி.வ [2] | வ.வ.வீ [1] | வ.வி.வ [2] |
| 1 | | | 20.00% | 21.94% | | | 20.00% | 21.94% |
| 3 | 20.50% | 22.54% | 22.50% | 24.47% | 20.50% | 22.54% | 22.50% | 24.47% |
| 6 | 20.50% | 22.54% | 22.50% | 23.77% | 20.50% | 22.54% | 22.50% | 23.77% |
| 12 | 21.00% | 23.14% | 23.00% | 23.00% | 21.50% | 23.75% | 23.50% | 23.50% |
| 13 | 19.00% | 20.75% | 20.00% | 19.85% | 19.50% | 21.34% | 20.50% | 20.34% |
| 15 | 19.00% | 20.75% | 20.00% | 19.54% | 19.50% | 21.34% | 20.50% | 20.02% |
| 18 | 18.50% | 20.15% | 20.00% | 19.11% | 19.00% | 20.75% | 20.50% | 19.57% |
| 24 | 17.00% | 18.39% | 20.00% | 18.32% | 17.50% | 18.97% | 20.50% | 18.74% |
| 36 | 17.00% | 18.39% | 20.00% | 16.96% | 17.50% | 18.97% | 20.50% | 17.33% |
| 37 | 16.00% | 17.23% | 20.00% | 16.86% | 16.50% | 17.81% | 20.50% | 17.22% |
| 48 | 17.00% | 18.39% | 20.00% | 15.83% | 17.50% | 18.97% | 20.50% | 16.15% |
| 60 | 17.00% | 18.39% | 20.00% | 14.87% | 17.50% | 18.97% | 20.50% | 15.16% |

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது [1] (வருடாந்த வட்டி வீதம்), [2] (வருடாந்த விளைவு வட்டி வீதம்)

ஒரு வருட முதிர்ச்சியின் போது (சிரேஷ்ட பிரஜை)

**23.50%**

(வ.வி.வ)

**23.50%**

2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையில் அங்கீகாரம் பெற்ற ஒரு நிதி நிறுவனமாக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் இலங்கையில் ஒரு பதிவு செய்யப்பட்ட பொதுக் கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (கம்பனிப் பதிவிலக்கம் P Q 00251293). கூட்டிணைப்புத் திகதி 2010 ஜனவரி 01. இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் முன்னெடுக்கப்படும் பணவைப்பாளர் காப்புறுதித் திட்டத்தில் இந்நிறுவனம் பங்கேற்றுள்ளது. இதன் காரணமாக, ஒவ்வொரு வைப்பாளருக்கும், ரூபா 1,100,000 வரையிலான காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது.

*Fitch Rating (SL) B+(lka) (Rating Watch On Negative)

## சர்வோதய டிவலப்மன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.

SARVODAYA DEVELOPMENT FINANCE

**தலைமை அலுவலகம்**
இல. 155A, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8.
துரித இல. 0115 444 666

**யாழ்ப்பாணக்கிளை**
இல. 317, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. +94215111666-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ரைக்ரர் மட்டும் உண்டு.

077 284 3416, 077 730 2343

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, A/L 2023, A/L 2024

மாணவர்களுக்கு குழுவாகவோ அல்லது தனிகாவோ கற்பிக்கப்படும்

074 111 0790

## விற்பனைக்கு

நடுகைக்குரிய மரவள்ளிக்கட்டைகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 6996 531

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீட்டொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

076 128 3990

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கேட்டை, வயது 37, கிரகபாவம் 20, செவ்வாய் 10இல், சூரியன் 12 இல், தொழில் அஞ்சலலுவலகம், (A.L) மணமகனுக்கு மணமகள் தேவை.

(cs. 46160) (2.6)

077 441 8918

## மணமகள் தேவை

யாழ்.கிறிஸ்தவம் அவுஸ்திரேலியா சிற்றிசன் வயது 40 எவ்வித தீய பழக்கவழக்கங்கள் அற்ற மணமகனுக்கு நற்குணமுள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். அண்மையில் எடுத்த புகைப்படம் தொலைபேசி இலக்கத்துடன் கீழ்காணும் இமெயில் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

melvinramesh220@yahoo.com

## காணி விற்பனைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் 2 பரப்புக்கு அதிகமான காணி விற்பனைக்குண்டு. இக்காணியானது வர்த்தக நடவடிக்கைகளுக்கு மிகவும் உகந்தது.

(ac 19762) (2.6)

077 744 3016

## வாகன விற்பனைக்கு

வாகன வகை : மோட்டார் முச்சக்கர வண்டி (Motor Tricycle Van)

வாகன இல. : WP-QY 8722

நல்ல நிலையில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 077 3532 156

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1986 உத்தராடம் 4ம் பாதம் MSc Civil Engineer UK Citizen மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு பெற்றோர் WhatsApp / Viber

076 7926 213

## காணி விற்பனைக்கு

2 பரப்பு காணி கோப்பாய் கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 9826 997

## சுப்பர்மார்கட் பணியாளர் தேவை

சாவகச்சேரி சுப்பர் மார்க்கட்டுக்கு கணினி அறிவும், முகாமைத்துவ (Management) நிர்வாகத்திறன் உடையவரும் முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 074 148 4478

87/1, A9, கண்டி வீதி, சாவகச்சேரி.

## விற்பனைக்கு

சம்பா நெல் விற்பனைக்குண்டு. அத்துடன் உடற்பயிற்சிக்காக நடக்கும் யந்திரம் (THREAD MILL) புதிய நிலையில் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 66 999 04

## ENGLISH MEDIUM MATHS CLASSES

GRADE - 6 - O/L

தனிப்பட்ட வகுப்பாகவோ, குழுவாகவோ நடாத்தப்படும்.

B.Misothan 077 1027 248

## வாடகைக்கு

அரசடி றேட் பிறவுண் றோட் சந்தியில் முன்னே C.E/B இருந்த வீடு வாடகைக்குண்டு

(ac 19762) (2.6)

077 730 2343

## கடை வாடகைக்கு உண்டு

யாழ்.கே.கே.எஸ் வீதியில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகாமையில்) கடை வாடகைக்கு உண்டு.

0762401508,077610 5771, 0777383060

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1986 ம் ஆண்டு உத்தரம் 7ஆ செவ்வாய் 38½ பாவமுடைய கொழும்பு பிரபல தனியார் நிறுவனத்தில் கடமைபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

077 634 1226

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், மருதனார்மடம் உட்பட்ட பகுதிகளில் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு தனிவீடு அல்லது இணைவீடு வாடகைக்கு தேவை.

077 695 8586

## வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் புடைவைக் கடைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புவர்கள் இருவரும் தொடர்புகொள்ளவும்

077 172 3554

## மணமகள் தேவை

கொழும்பில் BIO MEDICAL ENGINEER ஆக தொழில் புரியும் MBA, B.SC (HONS), HND (HONS) படித்த, 1990 ல் பிறந்த, 5'8" உயரமான, யாழ்.இந்து, நல்ல குடும்பப் பின்னணியில் உள்ள மணமகனுக்கு தகுதியான அழகிய 24-28 வயதிற்குட்பட்ட மணமகள் தேவை.

Whatsapp

077 308 1905

## விற்பனைக்கு

துணுக்காய் பகுதியில் 50,000 எண்ணிக்கையான தேங்காய்ப்பொச்சு, சிரட்டை விற்பனைக்கு உண்டு.

(cs. 46155) (2.6)

077 670 5677

## மணமகள் தேவை

1985 ஆண்டில் பிறந்த முல்லைத்தீவில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க (RC) மணமகனுக்கு மணமகள் தேவை.

077 187 9513

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/Ls Join

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka

23 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர் கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

REGISTER BEFORE September 10th to get EARLY BIRD DISCOUNT 20%



BTEC HND
NETWORK ENGINEERING
SOFTWARE ENGINEERING

பதிவுகளை மேற்கொள்ள வருகை தரும் போது செய்தித்தாளில் உள்ள இப்பிரிதியை கொண்டு வரவும்.

உயர்கல்வியை UK, CANADA, FRANCE, AUSTRALIA, NEW ZEALAND நாடுகளில் தொடரும் சந்தர்ப்பம்

நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Network Engineering / Software Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி

பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Network மற்றும் Software Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்

Pearson
SOLENT UNIVERSITY SOUTHAMPTON

23 YEARS OF TRUST & EXCELLENCE IN HIGHER EDUCATION
ISO 9001:2015 CERTIFIED

077 710 2131 INTAKE NOW ON
BCAS Jaffna Campus, #16, Point Pedro Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காரிருளில் எதிர்காலம்!

சர்வதேச அளவில், மந்த போசணை அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் உள்ளடக்கியிருக்கின்றது யுனிசெப். இலங்கையில் சுமார் 23 லட்சம் சிறுவர்கள் போசணைக் குறைபாட்டை எதிர்கொண்டு, மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் கட்டத்தில் உள்ளனர் என்றும் அந்த அமைப்பு எச்சரித்திருக்கின்றது.

'பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும்' என்பதைப்போல, சர்வதேச மதிப்பீடுகள், தரப்படுத்தல்கள் என அனைத்திலும் கடந்த ஒரு வருடமாக இலங்கைக்குக் கிடைத்ததெல்லாம் மதிப்பிழப்புகள் தான். பணவீக்கம், உணவுக்கான பணவீக்கம், ரூபாவின் பெறுமானத்தேய்வு, கடனேற்றம், நிலையான பொருளாதாரக் கட்டமைப்பு இல்லாத நிலை, சீரற்ற மருத்துவம் என்று நீண்டுசெல்லும் இந்தப் பட்டியலின் சமீபத்திய வரவாகவும் – ஆகப்பெரும் அபாய அறிவிப்பாகவும் அமைந்துள்ளது இலங்கைச் சிறுவர்களின் மந்த போசணை மட்டம் தொடர்பான யுனிசெப் அமைப்பின் அறிவிப்பு.

ஒன்றன் பின்னர் மற்றொன்றாக எத்தனையோ பின்னடைவுகளை இலங்கை இதுவரையும் எதிர்கொண்ட போதிலும், நீண்டகால அடிப்படையிலாவது மீட்சி ஏற்பட்டுவிடும் என்ற சிறு நம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இலங்கைச் சிறுவர்களின் போசணை மட்டம் தொடர்பான இந்த அறிவிப்பு இலங்கையின் ஒட்டுமொத்த நம்பிக்கையையும் சிதைக்கத்தக்கது என்பதுடன் எதிர்காலமென்ற ஒன்று இந்தத் தீவுக்கு இல்லை என்பதையும் கட்டியம் செய்கின்றது.

ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் இளைஞர்களிடமும் சிறுவர்களிடமுமே தங்கியுள்ளது. ஆபிரிக்கத் தேசங்களின் எதிர்காலம் இப்போதும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது என்றால், அதற்கு அங்குள்ள சிறுவர்களும் குழந்தைகளும் எதிர்கொண்டுள்ள போசணைக் குறைபாடுதான் முதன்மைக் காரணம். சிறுவர்களின் போசணை மட்டத்தில் விருத்திநிலை உறுதிப்படுத்தப் படாததால்தான் 'இருண்ட கண்டத்தின்' எதிர்காலம் இன்னமும் இருட்டிலேயே உள்ளது. தற்போது, அத்தகைய நிலைமைக்கு இலங்கையும் தள்ளப்பட்டுள்ளமையை என்னவென்று சொல்வது?

'சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறலாம்' என்பர். அத்தகைய மனோநிலையில் இருந்துதான் இந்த விவகாரம் அணுகப்படவேண்டும். அரசியலில் ஓர் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்திகளுக்கு முன்னர் சிறுவர்களின் போசணை மட்டம் தொடர்பில் அரசாங்கம் அதியுச்சக் கவனம் செலுத்தவேண்டும். சிறுவர்களை போசணையில் மந்த நிலையுள்ளவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் மாற்றியபின்னர், இந்த நாட்டை அரசியலிலும் பொருளாதாரத்திலும் மீட்டெடுத்து என்ன பயன்? ஆட்சிசெய்ய வாரிசு இல்லாமல் அரண்மனையை விஸ்தரிக்கும் நிலை இது. ஆதலால், ரணில் அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் இந்த விவகாரத்துக்குத் தீர்வுகாண வேண்டும். சிறுவர்களுக்கு உணவூட்டும் – அவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தும் – செயற்றிட்டங்களை துரித கதியில் முன்னெடுக்கவேண்டும். பாடசாலைகள் மூலம் இலவச போசாக்கு உணவூட்டல்களை மேற்கொள்ளும் பட்சத்தில், மாணவர்களின் இடைவிலகல்களையும் தடுத்துநிறுத்தி, கல்வி மட்டத்திலும் மேம்பாட்டை உறுதிப்படுத்த முடியும். இதற்கு எந்தளவு தூரம் ரணில் அரசாங்கம் செவிசாய்க்கப்போகின்றது – செயல்வடிவம் கொடுக்கப்போகின்றது – என்பதுதான் இங்கு பெரும் கேள்வி.


ஒரு காலத்தில் 'ஆசியாவின் நெற்களஞ்சியம்' என்று அறியப்பட்ட இந்தத் தீவின் சிறார்கள், இன்று உணவுக்கு வழியின்றி, போசணைக் குறைபாட்டை எதிர்கொண்டுள்ளனர் என்றால் இதைவிட அபத்தம் வேறென்ன இருந்துவிடப் போகின்றது? இந்தத் துயர்க்கதை இத்துடனாவது முடிந்துவிடப் போகின்றதா அல்லது தொடர்கதையாகப் போகின்றதா? எல்லாமே அரசாங்கத்தின் கையில். இந்த விடயத்திலேனும், அரசாங்கம் சரியான முடிவை எடுத்து, எமது எதிர்கால சந்ததியைக் காப்பாற்றுமா?

## நாளொரு நல்வார்த்தை

"மக்களை சக்தி வாய்ந்தவர்களாக மாற்றும் தலைவன் தான் ஒரு நாட்டின் பாதையை மாற்றியமைக்கும் திறன் பெற்றவனாவான்."

- அப்துல்கலாம்

'இனிமேல் சைபர் போர்' – ரணில் தெரிவிப்பு



# 48 லட்சம் மாணவர்களின் கற்றல்நிலை ஆபத்தில்!

## யுனிசெப் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 28**

**இலங்கையில் கடந்த இரண்டு வருடங்களாக மாணவர்களின் பாடசாலை கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. அதன் காரணமாக சுமார் 4.8 மில்லியன் மாணவர்களின் கல்விநிலை ஆபத்தில் உள்ளது என்று யுனிசெப் அமைப்பு எச்சரித்துள்ளது.**

யுனிசெப் அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்திய பணிப்பாளர் ஜோர்ஜ் லறியா அட்ஜெலின் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கீழ் மட்டத்தில் வாழும் மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதன் காரணமாக அவர்கள் தமக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்குவதற்குக் கூட முடியாமல் உணவு வேளைகளை தவிர்த்து வருகிறார்கள்.

இலங்கை தற்போது தெற்காசியவின் இரண்டாவது மிக அதிகமான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள நாடாக பதிவாகியுள்ளது. இலங்கையில் ஏற்கனவே பெரும்பாலான சிறுவர்களுக்கு அவசர உதவிகள் தேவைப்படுகின்றன. மாணவர்களின் கற்றல்செயற்பாடுகள் இரண்டு வருடங்களாகத் தடைப்பட்ட காரணத்தால் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், 4.8 மில்லியன் மாணவர்களின் கல்வி ஆபத்தில் உள்ளது. இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் வன்முறைகள் காரணமாகவும் பொருளாதார அழுத்தம் மற்றும் வறுமை நிலை காரணமாகவும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமை தொடருமானால் குறித்த சிறுவர்களின் எதிர்காலம் மோசமானதாகவே அமையும். சிறுவர்களுக்கு தொடர்ந்து கல்வி வழங்குவதை உறுதி செய்யவேண்டும். அதன்மூலம் அவர்களை எதிர்காலத்துக்குத் தயார்ப்படுத்தி பாதுகாக்கவேண்டும்- என்றார். (ம)

# ஜனாதிபதியின் கதிரையில் ஒளிப்படம்: பொலிஸாரைத் தேடியும் வலைவீச்சு!

கொழும்பு, ஓக. 28

கடந்த மே 9 வன்முறையின்போது ஜனாதிபதி அலுவலகத்துக்குள் நுழைந்து ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்து ஒளிப்படம் எடுத்த பொலிஸார் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிவான் திலின கமகே முன்னிலையில் இதனைத் தெரிவித்தனர். இதேவேளை மே 9 வன்முறையின் போது ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தமை மற்றும் ஜனாதிபதி கொடியை விரிப்பாக பயன்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் பலர் ஏற்கனவே கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

**நாளை** 29.08.2022 திங்கட்கிழமை ஆவணி 13

சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 – 09.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமன்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்




## தேவை

யாழ்நகரில்
பொதிப் போக்குவரத்து
சேவை நிறுவனத்திற்கு
கடமை புரிவதற்கு
கணக்கு லிகிதர்கள்
(பெண் பிள்ளைகள்) தேவை.
076 684 2229

(cs 46155) (2.6)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சாமியார் கதிரவேலு சிவானந்தன்**
(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்து சபை உள்ளக கணக்கு பரிசோதகர் கோண்டாவில்)



மண்ணில்
23.03.1933

விண்ணில்
08.09.2021

திதி: 29.08.2022

யாழ். அறுகம்புலம். காரைநகரை பிறப்பிடமாகவும். வவுனியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் சாமியார் கதிரவேலு சிவானந்தனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி கிரியைகள் நாளை (29.08.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அப்பா எம் குலத்தின் ஒளி விளக்கே
ஓராண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு நீங்கவில்லை அப்பா!
என்றும் எங்களுடன் இதயத்தில் வாழ்கின்றீர்கள் அப்பா!
உங்கள் நினைவுகளுடன் பயணிக்கின்றோம் அப்பா!

எங்கள் அன்பு தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
152A Aladi Road,
Thonikkal, Vavuniya.
0094 242 227 219

என்றும் உங்கள் பசுமை நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
05 • 12 • 1942



விண்ணில்
07 • 09 • 2021

**அமரர் கார்த்திகேசு நடராசா**
(ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)

திதி: ஆவணி மாத பூர்வபட்ச பிரதமை
[28.08.2022]

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய்
எமக்கு ஈகங்கள் பல புரிந்து எமை விட்டுப்
பிரிந்து சென்றாலும்
அப்பா ! உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்து ஒருபோதும் மறைவதில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

"களவாணி"
அல்வாய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs20328) (2.6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பை பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் திருமதி**
**கோமதி அம்மா நவரத்தினம்**

( ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியை
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி,
யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் ,யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி )

திதி: சுக்கில பட்ச பிரதமை (28.08.2022)



ஓராண்டு ஒரு நொடியாய் ஓடிமறைந்தாலும்
ஒவ்வொரு வினாடியும் ஆறவில்லை எம்துயரம்.
உங்கள் எழில்முகம் காணத் துடிக்கின்றது எம் இதயம்
இரவுபகல் என்றில்லாது எம் வளர்ச்சிக்கு கனவிலும்
நினைவிலும் நிறைந்து எம்மை வழிநடத்திய அம்மாவே
தங்கள் வாழ்க்கைப் பயணத்தின் கல்வித் தடங்கள் பல
இன்னும் நம்மில் பலபேரது கல்விப் பயணத்திற்கு வழிகாட்டும்
தடங்களாய்நீண்டு செல்வது தங்கள் தகைமையின் உயர்வே
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
இறைஞ்சுகின்றோம் இடைவிடாது .

தவிர்க்கமுடியாத காரணங்களால். 31ஆம் நாள் நிகழ்வுக்கு அழைக்க முடியாத நிலை காணப்பட்டதால் இன்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆண்டுத் திவசத்தில் கலந்து கொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிறப்பு
03.08.1928

இறப்பு
07.09.2021

நவமதி
[illegible],
[illegible] வீதி,
சாவகச்சேரி.
077 348 1962, 047 954 16367

குடும்பத்தினர்.

(cs 42747) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## பதவி வெற்றிடம்

01. நிர்வாக மற்றும் மனிதவள முகாமையாளர். (வெற்றிடம்- 01)
- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகைமை: நிதி மற்றும் நிர்வாகத்துறை.
- குறைந்த பட்சம் 10 வருட தொழில் அனுபவம்.
- நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான கல்வி தகைமைக்கு முன்னுரிமை.

02. திட்ட இணைப்பாளர். (வெற்றிடம்- 01)
- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: சமூகவியல் சார்ந்த துறை.
- குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
- உத்தியோகத்தர்களை திறன்பட மேற்பார்வை செய்யும் திறன்.
- கூட்டுறவு துறை சார்ந்த அனுபவம் மற்றும் வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்ய கூடிய திறன்.

03. திட்ட அலுவலர் (வெற்றிடம்- 01)
- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: சமூகவியல் மற்றும் வர்த்தகதுறை.
- குறைந்த பட்சம் 5 வருட தொழில் அனுபவம்.
- கூட்டுறவு துறை சார்ந்த அனுபவம் மற்றும் வடமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்ய கூடிய திறன்.

மேலே கூறப்பட்ட தகைமைகளுடன் MS Office மென்பொருள் கையாளும் திறன், அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் என்பவற்றை கொண்டிருப்பதுடன் வடமாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான இயலுமை உள்ள விண்ணப்பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர் கொண்டு தங்கள் பதவி நிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்படிவத்தை ஆவணி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று புரட்டாதி மாதம் 03 திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப் படுவார்கள். கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
தலைவர்.
கைதடி.

# பணிப்பெண் தேவை

கொழும்பில் நான்கு பேர் உள்ள சிறிய தமிழ்க் குடும்பம் ஒன்றிற்கு 40 வயதுக்கு மேற்பட்ட, சமைக்கத் தெரிந்த, வீட்டு வேலைகள் செய்யக் கூடிய, அனுபவமுள்ள, முக்கியம் குடும்ப பொறுப்புக்கள் அற்ற பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**071 8432 017**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 . 02 . 1945



மறைவு 29 . 07 . 2022

அமரர்
## திருமதி விஜயாம்பாள் புறாடி

எம்மை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

259,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 01 . 1939



மறைவு 26 . 08 . 2022

## திருமதி பார்வதி கிருஸ்ணபிள்ளை

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி கிருஷ்ணபிள்ளை கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னம்மா, அப்பையா, பூரணம், மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னா, தங்கம்மா, மணி ஆகியோரின் மைத்துனியும், ஜெயா (இத்தாலி), இராதா, ரவி ஜெனித்தா (பிரான்ஸ்), விஜி, ஜெயந்திரா (சுவிஸ்), வேணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசேந்திரம், காஞ்சனா, கிறிஸ்ரி, வவி, ஜெயக்காந்தன், சர்வேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், றெபெக்ஷன், றுக்ஷன், லுக்ஷிகா, ஜதிர்சன், கீர்த்தன், பாணுகோபன், நேமி கிருஸ்ணா, அனா, மேஷாக், பிரசன்னா, பிறைசன், றியோய்ஷன், லெவோன், மோபிகா, காருண்யா, டாறியா, எலியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க நிகழ்வுகள் இன்று (28.02.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் தாவடி சேமக்காலையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.46178) (2.6)

# ST. JOHN'S COLLEGE JAFFNA.
## VACANCY
### POST OF VICE PRINCIPAL

St. John's College, Jaffna was established in 1823 by the Church Missionary Society. It is a non-fee levying Assisted Private School within the Diocese of Colombo, Church of Ceylon. It is an all-boys school with distinguished reputation for academic achievement and an extensive range of extra-curricular activities.

We seek an experienced and enthusiastic educationalist with proven administrative and inter-personal skills to take up the post of Vice Principal.

**Essential Criteria:**
- Must be between 40 - 55 years of age.
- Must hold a Bachelor's Degree from a recognized University preferably with a Post Graduate qualification(s) in Education or Educational Management.
- Teaching experience in a Secondary school either Government or Private.

**Desirable Criteria:**
- Familiarity with National curriculum and Ministry Guidelines.
- Experience with latest learning and performance management systems.
- Good knowledge of English and Tamil is essential. Knowledge of Sinhala language will be an advantage.
- Ability to assist the school management in all educational matters and extra-curricular activities.

Emoluments will be commensurate with qualifications and experience.

Interested candidates are requested to submit their application along with a complete Curriculum Vitae with names & contact details of two non-related referees and copies of educational & professional certificates to the undersigned by registered post* or by email* by 26.09.2022.

*(*All applications should carry **'Post of Vice Principal, St. John's College, Jaffna'** on the top left corner of the envelope or on the subject line of the email.)*

**The Chairperson,
Governing Body for the Educational Institutions founded by C.M.S in Ceylon,
No. 368 / 3A, Bauddhaloka Mawatha,
Colombo 00700,
Sri Lanka.
Email: [illegible]b1960@gmail.com**

***Only shortlisted candidates will be called for interview***

(cr.37924) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CONVENIENT TRAVEL FOR VIP CLIENTS AND SENIOR CITIZENS**

No more fuel queues or driver and maintenance expenses

**Luxury SUVs, Cars and Vans**

English Speaking Driver and Fuel Provided

Short Term and Long Term Rent

Free Wi-Fi

We Tailor Make Packages to Cover All Your Transport Needs

For More Information Call

071 4 229 229

071 2 229 229

A&A Drive

## வேலைவாய்ப்புக்கள்
## ஹோட்டல் ஓவியா

**01. உணவகப்பணியாளர்கள்** (Restaurant Stewards)
அனுபவம் வாய்ந்த உணவகப்பணியாளர்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் (Motor bike License) உள்ள Home Delivery Boy தேவை.

**02. தொழில் நுட்பவியலாளர்** (Technician)
Electrical, Plumbing, A/C Repairing, Generator Repairing தொடர்பான அனுபவம் உள்ளவர்கள் தேவை.

மேற்படி பதவிகளுக்கு குறைந்தது 5 வருடங்கள் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் தகமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

தேர்வுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம், உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.


தொடர்புகளுக்கு: முகாமையாளர் (Manager) - 0773660828

47, Mill Road, Vavuniya. Email:hoteloviya@gmail.com

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 - 10 - 1937

இறப்பு 04 - 09 - 2021



**வைத்தீஸ்வரசர்மா ஆனந்தசுப்பிரமணியசர்மா**

ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம் சோகம்
மாண்புமிகு மனிதராய் வாழ்ந்திருந்தீர் இப் பூமிதனில்
பொதுநலனில் அக்கறையாய் பொழுதினை கழித்திருந்தீர்
பொருத்தங்கள் பல பார்த்து திருமணங்கள் நடத்தி வைத்தீர்
வாழ்த்துக்கள் பாக்களாய் பலர் இல்லங்களை அலங்கரிக்க
வானுலக வாழ்விற்கு விரைந்து விட்டீர் எனை விடுத்து
காலமெலாம் உமை நினைத்து நான் கலங்கும் வேளை தன்னில்
ஆறிடுமோ என் சோகம் இப் பாரினில் உயிர் வாழும்வரை
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

109, தும்பளை வீதி, பருத்தித்துறை.

ஆ.சௌந்தரநாயகி (மனைவி)

## வீடு வாடகைக்கு விடப்படும்

239/1 பிறவுண் றோட் யாழ்ப்பாணம்
4 அறைகள் 2 விசாலமான ஹோல் குளியல் அறை வாகன தரிப்பிட வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.
(வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள் விரும்பத்தக்கது.)

076 661 8169

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**
**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்

**J.J GROUP** 021 222 8854

(CS 20204)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகர் நவீன சந்தையில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

(cs.20486) (2.6)

077 472 9304

## விற்பனைக்கு

PIZZA OVEN (பிசா அவன்)
D பிறிசர். AC கல். ஜெனரேட்டர் (9.KVA). மா மிக்சர் (Dough Mixer). மகாநாட்டு மேசை (Conference Table). நெஸ்கபே மெசின். Bottle Cooler. நாய்கூடு மற்றும் பெயர் பலகை (Name Board Light) டிஸ்பிளே கபேட் (உணவகம்)

தொடர்பு :- **077 735 2165**

**A&A Collaborative Fund (pvt).Ltd**

## உடனடி வேலைவாய்ப்பு

புதிதாக திறக்கவுள்ள எமது யாழ்ப்பாணம் கிளைக்கு Group Loan அனுபவம் உள்ள ஊழியர்கள் கீழ்காணும் பதவிகளுக்கு தேவை.

- * Manager
- *Cashier
- * Marketing Executive
- *Trainee Executive

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்

Cv to be emailed to
careers@aacollaborativefund.com

மேலதிக விபரங்களுக்கு
070 3 999 422

(cr.37931) (2.7)

## Vacancy for Software Developer and Data Analyst

A USA-based company with officer in Colombo and jaffna is looking for candidates for the posts of Web Application Developer and Data Analyst.

Qualifications:
- Degree in Computing /IT or equivalent experience
- Good knowledge of programming
- Knowledge in Dadabese Management Systems
- Knowledge in Mobile programming is a plus

Send your CV to : siva@monthlywarranty.com

## ஆசிரியர் பயிலுநர்களுக்கு சலுகை வட்டியில் கடன்!

கொழும்பு, ஓக. 28

தேசிய கல்வியல் கல்லூரிகளில் பயிற்சி பெறுகின்ற ஆசிரியர் பயிலுநர்களுக்கு சலுகை வட்டியில் மாணவர் கடன் முறையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மூலம் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு 2 வருடங்கள் கல்விசார் பயிற்சிகளும் ஒரு வருடம் உள்ளகப் பயிற்சியும் வழங்கப்பட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

ஒரு வருடகால உள்ளகப் பயிற்சிக்காக கல்வியியல் கல்லூரிகளில் தங்குமிடம் வழங்கப்படாததுடன், தங்குமிடம் மற்றும் போக்குவரத்துச் செலவு களை ஆசிரிய பயிலுநர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

தற்போது ஆசிரிய பயிலுநர் ஒருவருக்கு கல்விசார் பயிற்சியின்போது செலுத்தப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு போதுமானதாக இல்லை. அதனால், ஆசிரிய பயிலுநர்களுக்குத் தற்போது கிடைக்கின்ற கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு மேலும் 10 ஆயிரம் ரூபா நிதி வசதியை சலுகை வட்டி அடிப்படையில் அரச வங்கியொன்றினூடாகப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள கல்வி அமைச்சர் சமர்ப்பித்த கருத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம-14.இ)

## வேலையாட்கள் தேவை

ஹோட்டல் வேலைக்கு ஆட்கள் தேவை. மும்மொழியும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

A.T Hotel கண்டுக்குளி

077 724 2427, 077 741 2713

## காணி விற்பனைக்கு

யாழ்.கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள 5¾ பரப்பு காணி விற்பனைக்கு.
(03 துண்டுகளாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

077 178 5276

## FOR SALE

Sparsely used " Sooriyamara" timber 8 piece settee set without cushion , Dining Table 7' x 3' 9" without chairs, Rattenning (PINNAL) single bed , Damro planked single bed, Twin Compartment KENNEL (Dog), sparsely used 23" TV, Sparsely used German Vacuum Cleaner, BRAND NEW cordless MAKITTA Brand Drill with 136 Bits for sale.

Contact: **0766 073 094**

## நன்றி

யாழ்ப்பாணம் கொழும்பு செல்லும் தனியார் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்யும் போது எனது தவறவிட்ட பொருட்களை பெறுமதியான தாலிக் கொடி, காப்பு, சங்கிலி, இந்திய பணம் மொத்தமாக 4 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியான தங்க ஆபரணங்களையும், பணத்தையும், தவறவிட்ட அனைத்து பொருட்களையும், கண்டெடுத்து எனது வீட்டிற்கு கொண்டு வந்து தந்த காரைநகரைச் சேர்ந்த கனகசபை தர்மகுலசிங்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்...

**S.சகாதேவன் - மட்டக்குளி**

## நுணாவில் IOC எரிபொருள் நிலையத்திற்கு பணியாளர்கள் தேவை

**எரிபொருள் தாங்கி ஓட்டுநர் (பவுசர்).**
வயது எல்லை (35-55 விரும்பத்தக்கது.
குறைந்தது 10 வருட அனுபவம் தேவை.
**எரிபொருள் நிரப்புநர்** (Bumber) தேவை. சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவர் விரும்பத்தக்கது.

தொடர்புகொள்ள வேண்டிய தொபேசி இல:-
**074 148 4478**
A9, கண்டி வீதி, நுணாவில், சாவகச்சேரி.

## 22 விற்பனைக்கு 22

யாழ் கந்தர் மடம் சந்திக்கு அண்மையில் திருவள்ளுவர் வீதியில் 3 பரப்புக் காணியும். யாழ் தட்டாரு தெரு சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும். யாழ் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 3 பரப்புக் காணியும். யாழ் பெருமாள்கோவிலுக்கு அண்மையில் 2 பரப்பு காணியும், வீடும். யாழ் மின்சார நிலைய வீதியில் CTB பஸ் தரிப்பிடத்திற்கு பின்புறமாக 3 பரப்பு காணியில் 2 கடையும். வீடும். யாழ் கஸ்தூரியார் வீதியில் 15 அடி அகலமும் 100 அடி நீலமும் கொண்ட மாடிக் கடையும். யாழ் ஆஸ்பத்திரி வீதியில் 15 அடி அகலமும் 200 அடி நீலமும் கொண்ட தனிக் கடையும். பருத்தித்துறை வீதியில் Signal சந்திக்கு அண்மையில் 4 பரப்பில் அமைந்த புதிய வீடும். யாழ் பலாலி வீதியில் பரமேஸ்வரா சந்திக்க அண்மையில் 6 பரப்பு வீடும். காணியும். யாழ் ஆஸ்பத்திரி . வீதியில் 16 அடி அகலமும், 100 அடி நீலமும் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு.

கனகசபை தர்மகுலசிங்கம் TEL 0777 232 535 பழமுதிர் சோலை, காரைநகர் / 183, காலி வீதி, வெள்ளவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூசணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உயர் உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில் யாழ்ப்பாணம்

**021 222 9306, 077 138 7596**

# மணமகள் தேவை

இந்து, அவிட்டம் 1986ம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.

**T.P: 077 6129 051**

(CS 9251) 1-6

# வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிறுவனத்திற்கு

1) தச்சுவேலையாட்கள்
2) தளபாட பெயின்ரர்
3) வாகன சாரதி
4) கூலிவேலையாட்கள்

தேவை: நிரந்தரமான வேலையும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.
தங்குமிட வசதி உண்டு

ஆர்க் தளபாட நிலையம்
இல.35, கொட்டைக்காடு ஒழுங்கை
கோண்டாவில் கிழக்கு (பஸ்டிப்போ அருகாமை)

**021 221 9909**
**077 300 1763**


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 17.11.1939 — உதிர்வு 25.08.2022



எமது பாடசாலை ஆசிரியர் **திரு.ந.யஜீந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**தம்பிஐயா நடேசபிள்ளை**

அவர்கள் 25.08.2022 அன்று காலமாகியதையிட்டு அவர் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை.**
**மிருசுவில்.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திருமதி கிஸ்டி றொபின் பிரியதர்சினி**
அவர்களின் அன்புத் தந்தை
**கந்தையா நாகராசா**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**


# வேலைவாய்ப்பு

- முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள் / பழக விரும்புபவர்கள்)
- முன்பள்ளி உதவியாளர்
- சிங்கள எழுத்து கற்பிக்க கூடிய ஆசிரியர்கள்
- தரம் 1 - தரம் 5 வரை ஆங்கில பாடம் கற்பிக்க கூடியவர்கள்
- முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியுடன் பழக விரும்புபவர்கள்
- மல்லாகம், தெல்லிப்பளை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சண்டிலிப்பாய், இணுவில், யாழ்ப்பாணம், புத்தூர் ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
- நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கும் போது உரிய ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

**நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி:**

**01.09.2022ம் திகதி வியாழக்கிழமை**
**காலை 7.30 மணி - பி.ப 3.00 மணிவரை**

**இடம்: Little Masters' Montesoori**
**சிவபதி, கே.கே..எஸ். வீதி, இணுவில்.**

**T.P: 077 377 0524**


# திருவுடையாள் மலருக்கு கட்டுரை ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 28

கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் பிரதேச மலரான 'திருவுடையாள் பிரதேச மலர் 08' என்ற மலருக்கு கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

கட்டுரைகள் வடமராட்சிப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், சமூகம், வரலாறு, தொல்லியம், பொருளாதாரம், விவசாயம் சார்ந்த விடயங்களாக இருப்பதுடன் கட்டுரைகள் யாவும் ஏ4 தாளில் பாமினி எழுத்தில் 12 அளவில் தட்டச்சு செய்யப்பட்டு வன்பிரதியாகவும், மென் பிரதியாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் நேரடியாகவோ தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படவேண்டும்.

தெரிவுக்குழுவால் தரமான கட்டுரைகளாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே 'திருவுடையாள் பிரதேச மலர்- 8 இல் பிரசுரிக்கப்படும் எனவும் கரவெட்டி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (ம-14)

# ஆண்டுகள் பதினாறு

**அமரர் சுப்பிரமணியம் பசுபதி**

**திதி: துதியை (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை**



தோற்றம் 29.11.1935 — மறைவு 26.08.2006


ஆண்டுகள் பதினாறு ஆனதுவோ
அப்பா!
நீங்கள் அருகிருந்தெம்
மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் -
எம் விழியாய்
உங்கள் வார்த்தைகள்
எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

**குடும்பத்தினர்.**

**'பசுபதீயம்'**
**கலாசாலை வீதி**

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 05 - 1966 — மறைவு 22 - 08 - 2022



## கனகசபை பிரபாகரன்

மருதங்கண்டு கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், கொயிலாமனை கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை பிரபாகரன் கடந்த (22.08.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், தெய்வேந்திரம் அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கோணேஸ்வரி (ஆசிரியை யா/ மந்துவில் றோ.க.த.க. பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், கீர்த்திகன், நர்த்தனன் (யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாஸ்கரன், சுதாகரன், சசிகலா, கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதிவதனி (யாக்கரை விநாயகர் வித்தியாலயம்), இளங்கோ (யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சுதர்சினி ஆகியோரின் மைத்துனரும், இலக்ஷனா (கொழும்பு மருத்துவபீடம்), விதுசனா (யா/பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி) ஆகியோரின் சிறிய தந்தையும், துளசிகா (யா/பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி) அவர்களின் மாமனாரும், தங்கேஸ்வரி, இராஜேஸ்வரி (ஆசிரியை யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், கனகேஸ்வரன் (மேலதிக அரசாங்க அதிபர் முல்லைதீவு), சிவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் சகலனும், கவிப்பிரியா, கவினா (கொழும்பு மருத்துவ பீடம்), கவிசனா (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பெரிய தந்தையும்; நிக்சிகா, கனோசன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனகன் புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொயிலாமனை,
கொடிகாமம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 9983699**

(CR 37936) 1-6

# மருத்துவர் கிறீனின் பிறந்ததின மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 28

வடபகுதியில் மருத்துவத் தொண்டாற்றிய மருத்துவர் கிறீனினது 200 ஆவது பிறந்ததின நிகழ்வு ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள 'மருத் துவர் கிறீன் 200ஆவது ஆண்டு நினைவு மலருக்கு' ஆக்கங்கள், மற்றும் தகவல்கள் ஆகியவை கோரப் பட்டுள்ளன.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் கலாநிதி த.சத்தியமூர்த்தியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது:

வடபகுதியில் மருத்துவத் தொண்டாற்றிய அமெரிக்க மிஷனரியினது பங்களிப்பு, மருத்துவர் கிறீனது மருத்துவத் தொண்டு, பிரித்தானிய மற்றும் பிறதேச மருத்துவ மிசனரி மருத்துவர்கள் பற்றிய கட்டுரைகள் உசாத்துணை, ஆதார மூலங்களுடன் எழுதப்படல் வேண்டும்.

மருத்துவர் ஜோன் ஸ்காடர் 1820 ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பில் ஆரம்பித்த சிகிச்சை நிலையம், மருத்துவர் கிறீன் 1848ஆம் ஆண்டில் மானிப்பாயில் ஆரம்பித்த மருத்துவக்கல்லூரி – மருத்துவமனை (கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை) பற்றிய தகவல்கள், ஒளிப்படங்கள் ஆகியவற்றையும் அனுப்பி வைக்கலாம்.

வடபகுதி மருத்துவ சேவையில் அமெரிக்க மிசனரியின் பங்களிப்பு, மருத்துவர் கிறீனது பங்களிப்பு, கிறீனும் தமிழும் முதலான விடயப் பரப்புக் களில் ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அத்துடன் மருத்துவ சஞ்சிகைகள், மற்றும் பருவ இதழ்கள், பத்திரிகைகள், நூல்களில் 1980களுக்குப் முன்னர் வெளிவந்த மிசனரி மருத்துவர்கள், மருத்துவர் கிறீன் மற்றும் வடபகுதியில் கடமையாற்றிய பிறதேச மருத்துவர்கள் பற்றிய கட்டுரைகள், தகவல்கள், அரிதான ஒளிப்படங்கள் மலரில் பிரசுரிக்கப்ப டும். ஆக்கங்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் இருப்பது விரும்பப்படுகிறது. சிங்கள மொழியிலும் அனுப்பி வைக்கலாம்.

அதற்கமைய ஆக்கங்களை எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் baladhuvarahan@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 'பா.துவாரகன், அபிவிருத்தி உத்தியோகத்தர், போதனா மருத்துவமனை' என்ற முகவரிக்கோ நேரடியாக அனுப்பி வைக்கலாம் – என்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பஹா துப்பாக்கிச் சூடு: 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 28

கம்பஹா பிரதேசத்தில் உள்ள சிகை அலங்கார நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள், சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 6ஆம் திகதி கம்பஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள சிகை அலங்கார நிலையமொன்றில் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 6 பேர் கொனஹென விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர். அத்துடன் சந்தேகநபர்களிடமிருந்து துப்பாக்கி மற்றும் கார் ஒன்றும் மீட்கப்பட்டன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கொனஹென விசேட அதிரடிப் படையினர் மற்றும் கம்பஹா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,இ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 . 04 . 1936

உதிர்வு 30 . 07 . 2022



ஐ.குமாரசாமி

(உரிமையாளர் - மொடேன் எலக்ரிக்கல்ஸ் வேக்ஸ்
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்)

(29.08.2022)

T.P.:026 222 6551

சுபிதா (மகள்)
திருகோணமலை.

(cs 42876) (2.6)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 21 . 02 . 1939

இறப்பு 07 . 09 . 2021



கடந்த (07.09.2021) செவ்வாய்க்கிழமை ஆவணி மாதம் வளர்பிறை பிரதமை திதி அன்று எமது குலதெய்வமாகிய பூதவராயர் திருவடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

அமுதலிங்கம் குணரத்தினம்மா

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.

(CS 46163) 1-6

# மரண அறிவித்தல்

## திரு. சபாரத்தினம் கந்தசாமி



நீர்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கந்தசாமி கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் - நல்லமுத்து தம்பதியரின் மகனும், கணபதிப்பிள்ளை - செல்வநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராணியின் பாசமிகு கணவரும், புஸ்பாகரன் (லண்டன்), இந்திரகரன் (லண்டன்), மகிழினி (வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சாமினி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும், துசித்தா (லண்டன்), மேகலா (லண்டன்), விபுலன் (வைத்தியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), றசீகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அஷ்னி, ஓவியா, பிரியன், தருன், பவிஷன், நிதிஷன், கயூரி, கீர்த்திக், ஆருஷா ஆகியோரின் அருமைப் பேரனும், பூபதியம்மா, காலஞ்சென்றவர்களான இலட்சுமி, தவராசா மற்றும் விஜயரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணரத்தினத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
077 478 1791

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.

தோற்றம் 24.04.1948

மறைவு 26.08.2022

(cs 1211) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமிர்தலிங்கத்தின்...

தில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளைத் தலைவருமான ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

காலை 9 மணியளவில் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்றலில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட அமிர்தலிங்கத்தின் சிலைக்கு மாலை அணிவித்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் நினைவுப் பேருரை, 'இலங்கை அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தமிழர் கல்வியும்' எனும் தொனிப்பொருளை மையப்படுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் இ.சர்வேஸ்வராவால் வழங்கப்பட்டது.

சிறப்பு நிகழ்வாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் உதயவாழ்வு நிறுவனத்தின் தலைவி யசோதை சரவணபவன் ஆகியோரால் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சகோதரர் அப்பாப்பிள்ளை வாசுதேவலிங்கம், கௌரவிக்கப்பட்டார்.






கலை நிகழ்வாக தற்கால பேரிடர்களை புலப்படுத்துமுகமாக பொன்னாலை சந்திர பரத கலாலயத்தின் புத்தாக்க நர்ட்டிய ஆற்றுகை இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், காரைநகர் சபை தவிசாளர் க.பாலச்சந்திரன், வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், உதய வாழ்வு நிறுவனத்தின் தலைவி யசோதா சரவணபவன், உதய வாழ்வு மாணவிகள், ஆசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். ஜெல்சின், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-ஒ-125)

## இந்தியாவுக்கு...

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த இடங்களில் இதற்கு எதிர்ப்புக்கள் வந்தால் அந்த எதிர்ப்புக்களின் பின்னணி தொடர்பில் ஆராய வேண்டும். அரசியல் பின்புலத்துடனும் அந்த எதிர்ப்புக்கள் வரக்கூடும். இது தொடர்பில் அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவோம். அமைச்சரவையின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை வந்தால் அதையும் நாம் செய்வோம்.

அனைத்துச் செயற்றிட்டங்களும் மக்களின் நலன் கருதியே இருக்கும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்காது - என்றார். (அ-ஒ-5-22)

## சாதாரண...

தாக தெரிவிக்கப்படுகிறது. பேராதனை பல்கலைகழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளவிவரவியல் ஆய்வுகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. 2019ஆம் ஆண்டில் சாதாரண குடும்பம் ஒன்றுக்கு மாதாந்த நுகர்வுக்கான செலவு 63 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## அரைவாசிப்...

என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மின்சார சபையில் உள்ள 26 ஆயிரம் பணியாளர்களுக்குப் பதிலாக அதிலுள்ள அரைவாசிப் பணியாளர்களால் திறமையாகப் பணியாற்ற முடியும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பெற்றோலிய சேமிப்பு முனையம் என்பவற்றில் பணிபுரியும் 4 ஆயிரத்து 200 பேருக்கு பதிலாக, அங்குள்ள 500 பணியாளர்களால் திறமையாகப் பணியாற்ற முடியும்.

திறமையற்ற பணியாளர்களால்தான் தொழிற்சங்கங்கள் வளர்கின்றன. இலங்கையில் உள்ள பெரும்பாலான அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது இன்றியமையாதது.

அரசியல் தீர்மானங்கள், அரசியல் நியமனங்கள், தவறான நிர்வாகம் மற்றும் திறமையின்மையே அரச நிறுவனங்களின் வீழ்ச்சிக்குக் காரணம். அரசாங்க நிறுவனங்களில் செயல்திறன் அடிப்படையிலான சம்பள முறை கட்டாயம் - என அவர் பதிவிட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் அமைச்சர் முறைப்பாடு மேற்கொண்டிருந்தார். அத்துடன் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் மின்சாரசபைத் திருத்தச் சட்டத்தை அமைச்சர் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## மூன்று...

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கணவன், மனைவியிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மனைவியின் சகோதரன் இதில் தலையிட்டுள்ளார்.

இதன் காரணமாக கணவனின் தரப்பினர், மனைவியின் சகோதரனின் வீட்டுக்கு சென்று அங்கு நின்ற 3 மாதமே நிரம்பிய கன்றுக் குட்டியை கல்லால் அடித்துக் கொலை செய்துள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-14)

## அரசியல்...

கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் அரசியல் தீர்வு விடயம் சம்பந்தமாக அரசாங்கத்துடன் மாத்திரமன்றி ஏனைய தரப்புக்களுடனும் பேசியிருக்கின்றோம். இது தொடர்பான எமது நடவடிக்கை தொடர்கின்றது. நாட்டின் தேசிய பிரச்சினைகளில் அரசியல் தீர்வு விடயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

வடக்கு - கிழக்கு தமிழ்பேசும் மக்களின் சரித்திர ரீதியான தாயகம். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் அவர்களின் வதிவிடப் பிரதேசம். எனவே, தமிழ்பேசும் பிரதேசம் ஒன்றிணைந்த வடக்கு=கிழக்கில் அதிகாரப் பகிர்வின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். இந்தக் கருத்து எல்லோராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு - வலியுறுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அது சில காரணங்கள் நிமித்தம் இழுபடுகின்றது. மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகள் இந்த விடயம் தொடர்பில் காலத்தைக் கடத்துகின்றன. இதை இனியும் அனுமதிக்க முடியாது.

காலம் தாழ்த்தாமல் தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இது தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் நாங்கள் தொடர்ந்து பேசுவோம். இந்த விடயத்தில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ-5-22)

## மகாநாயக்கர்களை...

அஸ்கிரி விகாரைக்கு சென்ற இலங்கைக்கான சீனத் தூதுவர் அஸ்கிரி பீட மகாநாயக்கர் வரக்காகொட ஞானரத்தன தேரரை சந்தித்து ஆசி பெற்றார். பின்னர் மல்வத்து மஹா விகாரைக்கு சென்ற இலங்கைக்கான சீனத்தூதுவர், திப்பட்டுவாவே சுமங்கல நாயக்க தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

இதனிடையே, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கண்டிக்கு நேற்றுப் பயணம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், அந்தப் பயணம் இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டது.

சுகவீனம் காரணமாக பயணம் இரத்து செய்யப்பட்டதாக கண்டியில் உள்ள இந்தியத் துணைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ஒ-இ)

## துர்க்கை...

அன்னதானம், குடிதண்ணீர், போக்குவரத்து, வாகனத் தரிப்பிடங்கள், உணவகங்கள், தற்காலிக வியாபார நிறுவனங்கள், சாரணர் சேவை, மின் விநியோகம், அடியவர்களின் பாதுகாப்பு, சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்தல், ஆலயத் துப்புரவுப் பணி, மலசலகூட துப்புரவு பணி, வீதி செப்பனிடல் உள்ளிட்ட விசேட ஒழுங்குகள் அந்தந்தத் துறையினரால் முன்னெடுக்கப்பட் டுள்ளன. அத்துடன் ஆலயத்துக்கு வரும்போது அடியவர்கள் உடைமைகள், நகைகள் என்பவற்றைத் தவிர்க்க வேண்டும். அவ்வாறில்லையேல் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

ஆலயச் சுற்றுப்புறத்தில் பொலிஸார் விசேட கடமையில் அமர்த்தப்படுவார்கள். எனவே பக்தர்களுக்கு ஏதேனும் அசௌகரியம் ஏற்பட்டால் பொலிஸாரையும் ஆலய நிர்வாகத்தினரையும் தொடர்பு கொள்ளலாம் - என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-ம-14-9)

## சீனக்கப்பல்...

சமுத்திரத்தை ஆய்வு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 22ஆம் திகதி அம்பந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுச் சென்ற கப்பல், சீனாவிலுள்ள ஜியாங்யின் துறைமுகத்துக்கு நேரடியாக செல்லும் என அறிவிக்கப்பட்டது. எனினும், அம்பந்தோட்டையில் இருந்து புறப்பட்ட கப்பல் தற்போது இலங்கைக்கு தெற்கே இந்து சமுத்திரத்தில் ஆய்வு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென் பகுதியில் இருந்து சுமார் 400 கடல் மைல் தொலைவில் சீனக் கப்பல் நிலைகொண்டு, ஆய்வில் ஈடுபடுவது தெரியவந்துள்ளது.

சீன கப்பல், ஜியாங்யின் துறைமுகத்துக்குச் செல்லுமா அல்லது வேறு நாட்டின் துறைமுகத்துக்குச் செல்லுமா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (அ-ஒ-இ)

## சந்நிதியான்...

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பிரதமகுரு சிவசிறி உலக குருநாதன் ஐயர் தலைமையில் பூசைகள் இடம் பெற்று மாலை 4.30 மணியளவில் கொடியேற்றப்பட்டு பெருந்திருவிழா ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் 6ஆம் திகதி கைலாச வாகனமும், 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 9ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் மீண்டும் போராட்டக்காரர்கள்

## புலனாய்வுப் பிரிவு தகவல்

கொழும்பு, ஓக. 28
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடைக்கால வரவு = செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றவுள்ள தருணத்தில், கொழும்பில் மிகப் பெரிய போராட்டத்துக்கு திட்டமிடப்படுவதாக புலனாய்வுப் பிரிவு அரசாங்க உயர் மட்டத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
பல்வேறு போராட்டக் குழுக்கள் அன்றைய தினம் கொழும்பில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும், இதன்போது அசம்பாவிதங்கள் நிகழக்கூடும் எனவும் புலனாய்வுப் பிரிவு தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-இ)

# பேராசிரியரானார் ஈஸ்வரமோகன்

யாழ்ப்பாணம், ஓக. 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையின் முன்னாள் தலைவரும், மூத்த விரிவுரையாளருமான கலாநிதி தம்பு ஈஸ்வரமோகன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பல்கலைக்கழகப் பேரவை நேற்று வழங்கியது. (அ-ஒ-இ)

# பல்வேறு திருட்டுக்களுடன் தொடர்புடையவர் கைது

## 7 துவிச்சக்கரவண்டிகள், 4 மோட்டர்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 28
பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவரெனக் கருதப்படும் 27 வயதான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் கைதான சந்தேகநபருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த விசேட தகவலுக்கு அமைய குப்பிளான் வடக்கு கம்பம்புலம் பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.
அவரிடமிருந்து 7 துவிச்சக்கர வண்டிகள், 4 மோட்டர்கள், 2எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் 80 மில்லி கிராம் ஹெரோய்ன் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-ஒ.125)

# மரண அறிவித்தல்



## திரு.கபிரியேல்பிள்ளை அருளானந்தம்

யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் வீதியை பிறப்பிடமாகவும் 18A கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கபிரியேல் பிள்ளை அருளானந்தம் நேற்று (27.08.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் பிள்ளை-சபினம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற திருமதி விக்டோறியாவின் (இளைப்பாறிய ஆசிரியர் புனித அந்தோனியார் பாடசாலை பாஷையூர்) அன்புக் கணவரும், திருமதி யூடித் (முன்பள்ளி ஆசிரியை தி.கு.க.ம), திரு.யூட் (R.D.O காரைநகர் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் க.கிறிஸ்ரி எல்மன், யூ.பிறேமிலா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான மேரி விக்டோரியா.பிற்றர் சேவியர், யோக்கீம்பிள்ளைபோல், ஹூர்த்தம்மா, வின்சன்டிபோல், அருளம்மா மற்றும் அலெக்சாந்திரியா ஜெயராணி (குஞ்சி) ஆகியோரின் சகோதரரும், திருமதி கி.ஆன்சிறோமி, ஜீன் தியோயினி, வளன்பிரசாத், ஆன்நொயிலின், ஆன் கரோலின் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான திருமதி மேரிமாகிறற், திருமதி கெலன் மற்றும் அருட்சகோதரி எல்சி (தி.கு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை திருப்பலி நாளை (29.08.2022) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18A கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

# மரண அறிவித்தல்

## திருமதி சிந்தியா அமலேஸ்வரி சந்தியாப்பிள்ளை (லலி)



ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிந்தியா அமலேஸ்வரி சந்தியாப்பிள்ளை அவர்கள் கடந்த 23.08.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பிறிற்றோ அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான செபஸ்த்தியாம்பிள்ளை றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சந்தியாப்பிள்ளை (Rt. சுங்க அதிகாரி யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், அமலறாஜ் (Merchant Navy), விமலறாஜ் (Merchant Navy), நிமல்றாஜ் (சூட்டி-கனடா), திலக் தேவறாஜ் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் அலோஷியா கிருசாந்தி (கொழும்பு), எனிட் (யாழ்ப்பாணம்), மரி மைதிலி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்ரன் பாலேந்திரா (யாழ்ப்பாணம்), விமலேஸ்வரி (யாழ்ப்பாணம்), யோசப்பின் (நோர்வே), றாஜேஸ்வரி (கொழும்பு), றஞ்சித் ஜேசுதாசன்(நோர்வே) யூலியற் சகாயறாணி (Rt.ஆசிரியை யாழ்ப்பாணம்), ஜெனற் குளோறியா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ஹூர்த்து பிலோமினா, காலஞ்சென்ற அன்ரனியம்மா (மலர்), றோஸ்மேரி (யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற ஜோசப் ஜோண், புஸ்பராணி (Rt. தாதி யாழ்ப்பாணம்), றீற்றம்மா(கனடா), துரைரெட்ணம்(யாழ்ப்பாணம்), ஸ்ரனிஸ்லொஸ் (நோர்வே), காலஞ்சென்ற தேவநாயகம், கௌறி (நோர்வே), தனேந்திரன்(யாழ்ப்பாணம்), றோய் (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிசாமி, பொற்பீரியர், மரியநாயகம், ராஜநாயகம் மற்றும் மேரி திரேஸ் (சறோபியா) ஆகியோரின் பாசமிகு சகலியும், ஷெறோன், நிறோன், டிறோன், அபிகேயில், டினோஷியா, அபிஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 29.08.2022 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


மண்ணில்
16.11.1949

விண்ணில்
23.08.2022

No 9, Vidan's Lane,
Eachchamoddai, Jaffna

தகவல்: : குடும்பத்தினர்
076 250 7142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 28

வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால், இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்ற ருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. பிற இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். அத்துடன் புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்- என்றுள்ளது. (ச-இ)

# தமிழகம் வாழ் ஈழத் தமிழருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

கொழும்பு, ஓக. 28



இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் வசிக்கும் கராத்தே பயிற்றுநர் பாலசிறீதரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து தற்போது சென்னையில் வசிக்கும் அவர், நீண்டகாலமாக மாணவர்களுக்குக் கராத்தே பயிற்சி வகுப்புக்களை நடத்திவருகிறார்.

இவரின் மாணவர்கள் தமிழகம் மாத்திரமன்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கும் சென்று கராத்தே போட்டிகளில் வெற்றிகளைக் குவித்துள்ளனர். இவர் மாணவர்களின் ஆளுமை மேம்பாட்டுக்கான பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இந்த நிலையிலேயே கராத்தே துறையில் அவரின் பணிகளைப் பாராட்டி, அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது. (ம)

# நிர்வாகக் கூட்டம்

கிளிநொச்சி ஓக. 28

கிளிநொச்சி உருத்திரபுரம் அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாக சபைக் கூட்டம் சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் சங்க மண்டபத்தில் இன்று 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு செயலாளர் செ.சுப்பிரமணியம் கேட்டுக் கொண்டுள்ளார். (ய-9)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 28

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகு சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ கலாநிதி சிவறஞ்சினி சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார். (ம-14)



நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் நேற்று விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவரின் தனிப்பட்ட நிதியொதுக்கீட்டில் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு இந்த உப கரணங்கள் வழங்கப்பட்டன. (எ-125)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்களுக்கு அறிவித்தல்!

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உயர்தர 2024 ஆம் ஆண்டு மாணவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சீருடையுடன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுத்தகவல் தொடர்பாடல் தொழிநுட்பப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயர்தர 2019,2021, 2022 ஆம் ஆண்டு மாணவர்கள் தமது பகுதித்தலைவர்களுடன் தொடர்புகொண்டு பரீட்சைக்கு நிகழ்நிலையில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)



# வாழைப்பழ விலைகள் தொடர்ந்தும் ஏறுமுகம்

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ். குடாநாட்டில் வாழைப்பழங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன என்று நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

ஆலய மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமையே இந்த விலை அதிகரிப்புக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படி கதலி வாழைப்பழம் கிலோ 200 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. (ச-17)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி உண்டாகும். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். இலாபம் ஏற்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான செயல்களில் ஈடுபட்டுவெற்றிபெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்கால நலன்கருதி திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும். புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத லாபம் கிடைக்கும். ஆதரவு உண்டாகும்.

**கன்னி:** குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்ட செயல் முடியாமல் போகும். நெருங்கியவர்களின் செயற்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள். கவனம் தேவை. [illegible]

**துலாம்:** திடீர் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில் எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். செலவு செய்து சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழிலில் வெற்றி காண்பீர்கள். பணவரவால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உங்கள் திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத்தில் யோகமான நாள். உடல்நிலை சீராகும்.

**தனுசு:** நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறிமுகமாவார்கள். தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளைகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பீர்.

**மகரம்:** நேற்றுவரை இருந்த நெருக்கடியிலிருந்து மீள்வீர்கள். புதிய பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்களில் இருந்து உதவி கிடைக்கும் நாள். தடைப்பட்டிருந்த வேலைகள் முடியும்.

**கும்பம்:** எதிர்பார்க்காத செயலில் பிரச்சினை தலைதூக்கும். அமைதி தேவை. பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்புவட்டம் பெருகும். விழிப்புணர்வுடன் செயற்படுவீர்கள்

**மீனம்:** தொழிலில் இன்றுநம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வீட்டுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். யோகமான நாள். உங்கள் திறமை வெளிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

யாழ்.நகர் பிறவுண் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருந்து வேலைசெய்ய ஆண்/பெண் ஒருவர் தேவை. பையன் ஒருவர் விரும்பத்தக்கது.
(கிளினிங், சிறுவேலைகள்.)
சம்பளம் 30,000/- உணவு, தங்குமிடம் இலவசம்.

**077 7111 999**

## பணியாளர் தேவை

துப்புரவு பணியாளர் தேவை
29, 30.08.2022 (திங்கள், செவ்வாய்)
ஆகிய தினங்களில் மு.ப 9.00-பி.ப 3.00 மணி வரை நேரில் சமூகம் தரவும்
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## காணவில்லை



யாழ்.நகரில் நேற்று முதல் காணவில்லை
**திருமதி கமலாசனி அரசரட்ணம்**
வயது - 72
தலைமயிர் நிறம்- வெள்ளை (நரை)
உயரம்:- 5' (அடி)
உடுப்பு - மெல்லிய நாவல், பாவாடை, சட்டை,
நிறம்:- வெள்ளை (பொதுநிறம்)
இவரை அடையாளம் காட்டுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
கீழ்வரும் தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.

**075 042 4377, 075 781 1552, 077 824 8934**


## காணி விற்பனைக்கு

மாம்பழம் சந்திக்கு அருகாமையில்
A9 பிரதான வீதியில் இருந்து
190 Meter தூரத்தில் 1 பரப்பு 6 குளி காணி விற்பனைக்கு உண்டு.
நல்ல அயலவர்கள் வடக்கு வாசல் மற்றும் மேற்கு வாசல் வீடு கட்டுவதற்கு உகந்த காணி.

**076 065 0166, 074 308 3364**


வீதியில் பயணித்த
# இளைஞன் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக. 28
சுன்னாகம் நகரப் பகுதியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த 21 வயது இளைஞன் மீது நேற்றுக் காலை வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இளைஞன் மீது வாள்வெட்டை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ஒ,125)

# எரிபொருள் சிக்கல் 2 நாள்களில் சீராகும்

கொழும்பு, ஓக. 28
எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் ஏற்பட்டதை அடுத்து மீண்டும் ஏற்பட்டுள்ள வரிசை முறைமை 2 நாள்களில் முடிவுக்கு வரும் என்று அமைச்சர் காஞ்சன விஜேயசேகர தெரிவித்தார்.
விநியோகத்தில் ஏற்பட்ட தொய்வு, இறக்குவதில் தாமதம் மற்றும் பணம் செலுத்துவதில் தாமதம் ஆகியவைவே நீண்ட வரிசைக்கு காரணம் என அமைச்சர் கூறியுள்ளார். (அஒ.இ)


## சமையலாள் தேவை

யாழ்.நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்)
(பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்)

**077 9592 628**


மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு
# புதிய உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 28
வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில் புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
5 பேரை உள்ளடக்கிய வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் காலம் கடந்த ஜூலை மாதத்துடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ,20)


# எலிக்காய்ச்சலால் சிப்பாய் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 28
கீரிமலை இராணுவ முகாமில் பணியாற்றிய 38 வயதான சிப்பாய் எலிக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.
கடந்த 22 ஆம் திகதி காய்ச்சல் காரணமாக கீரிமலை இராணுவ மருத்துவமனையில் அந்தச் சிப்பாய் சிகிச்சை பெற்றுள்ளார்.
பின்னர் பலாலி இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கடந்த 25ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

(அ-ஒ,26)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 12 . 1947



மறைவு 27 . 08 . 2022

**திரு.வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி**


அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகவும் ஊரெழு பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி அவர்கள் 27.08.2022 சனிக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், தம்பிப்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன் (ஸ்ரீ-ஆருஷன் றேடர்ஸ் ஊரெழு), ஜீவனா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சன் (கனடா) அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆருஷன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சுப்பிரமணியம், மங்களேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான தனலஷ்சுமி, கிருஷ்ணமூர்த்தி, சிவலிங்கம், கனகரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுப்பிரமணியம், நடராசா, கணேசு, கனகாம்பிகை, மகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் ஊரெழு பொக்கானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 492 8274
077 907 2639
+1(450) 629 7041

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 . 10 . 1964



மறைவு 29 . 07 . 2022

கடந்த (29.07.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் வைத்திலிங்கம் ரவீந்திரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (26.08.2022) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (28.08.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

(CS 20528) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியசக்தி மின் உற்பத்தியாளருக்கு அரசாங்கம் ரூ.28 பில்லியன் நிலுவை



கொழும்பு, ஓக. 28

சூரிய சக்தி மின் உற்பத்தியாளர்களுக்கு இலங்கை மின்சார சபை 28 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது என சூரிய சக்தி மின்னுற்பத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தற்போதைய மின்சார நெருக்கடிக்குத் தீர்வாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கும் மக்களுக்கு உரிய தொகை வழங்கப்பட வேண்டும். ஆயினும் இதற்கு அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தவில்லை.

கவனம் செலுத்தப்பட்டிருப்பின் தற்போது நடைமுறையாகும் மின்வெட்டில் மேலும் மணித்தியாலக் குறைப்பைச் செய்திருக்க முடியும்.

இந்த நிலையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சாரத்தை உற்பத்திசெய்து தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கும் மக்களுக்கு இலங்கை மின்சார சபை 28 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது- என்றார். (ச-இ)

### தமிழர்களின் நாகரிகத்தைப் பாதுகாக்க

# மேலை நாகரிகத்தில் நாட்டம் வேண்டாம்!

### விக்னேஸ்வரன் எம்.பி எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 28**

**எமது நாட்டின் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், 'கலாசாரங்களின் மட்டில்' வெளிநாட்டுக் கலாசாரத்தையும் வெளிநாட்டவர் களையும் பின்பற்ற வேண்டாம் என்று தெரிவித்துள்ளார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன்.**

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்வொன்றில் உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய விஞ்ஞான யுகத்தில் எமது பாரம்பரியங்கள் அடிபட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன. மகாத்மா காந்திபற்றி ஒரு சம்பவம் கூறப்படுவதுண்டு. அவர் இங்கிலாந்து சென்று விருந்துபசார மொன்றில் கலந்துகொண்டபோது தன் வலது கையால் உணவை உண்ண ஆயத்த மானாராம். அப்பொழுது அவரை வரவேற்ற வர், கரண்டியையும் முள்ளுக்கரண்டியையும் சுட்டிக்காட்டி நாங்கள் அவற்றினூடாகத் தான் உணவு உண்போம் என்றாராம். அதற்கு காந்தி, நீங்கள் பலர் பாவித்த எச்சில் கரண்டிகளைப் பாவிக்கின்றீர்கள். நான் சுத்தமான எனது கையையே பாவிக்க விரும்புகின்றேன் என்றாராம்.

வெளிநாட்டார் சகவாசத்தால் எமது நடை, உடை, பாவனை யாவும் மாறிவிட்டன. அத்துடன் வெளிநாட்டவர்களைப் பின்பற்றி நடந்து கொள்வதே நாகரிகம் என்றும் எம்மவர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டனர்.

இந்தநிலை மாற எம் மக்களுக்கு எமது பாரம்பரியங் களின் பெருமைகளை எடுத்துரைக்க ஒரு மார்க்கம் வேண்டும். சைவமும் தமிழும் எமது தமிழ் மக்களின் பொக்கிஷம். எனவே வெளிநாட்டுக் கலாசாரத்தைப் பின்பற்றாமல் சைவத்தையும் தமிழையும் வளர்த்து எமது கலாசாரத்தை நிலைநாட்ட வேண்டும்- என் றார். (ம-14)


## வேலைவாய்ப்பு

**VISA Constrcution Service**

எந்த விதமான Degree முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Basic salary 35,000/= to 65,000/=

உங்கள் சுயவிவரக் கோவையினை மின்னஞ்சல் மூலம் அனுப்பவும்.

**076 136 8548**

sunholidayhome@gmail.com



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 60 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாக்வும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை இரண்டு இலட்சம் **200,000/=** மட்டும்.

தொடர்பு: **077 911 6983**
**077 148 8348**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 15 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூரத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.

தொடர்பு: **076 7558 606**
**077 259 0391**


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 . 02 . 1946



மறைவு 29 . 07 . 2022

கடந்த (29.07.2022) வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீதரன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.08.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்தும் உள்ளூரிலிருந்தும், வெளியூரிலிருந்தும் தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல், சமூக வலைதளங்களூடாகவும் RIPBOOK ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர் களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், கண்ணீர் பதாகைகள், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர் களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அம்மா எங்களை விட்டு சென்ற கணம் முதல் இன்று வரை தோளோடு தோள் நின்று இறுதிக்கிரியைகளின் போதும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'அம்பிகைவாசா',
கற்பகவிநாயகர் கோவிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அண்மையாக பேரின்பநாயகம் வீதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**074 321 1097**


## புதிய மாடி வீட்டின் மேல் பகுதி வாடகைக்கு

யாழ். பிரதான வீதியின் தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமையில் பாதுகாப்பான இடம் : அரசாங்க உத்தியோகத்தர்கள் குடும்பமாக எதிர்பார்க்கின்றோம்.

**076 196 6087**

## போக்குவரத்து சேவைக்கு

**Wedding Car Services & Tours**




நவீனரக அதி சொகுசு கார்

அனைத்து நிகழ்வுகளுக்கும் மற்றும் அனைத்து தேவைகளுக்கும் சாரதியுடன் கார் வழங்கப்படும்.

**T.P: 0777 89 60 54**

**Jaffna Wedding and Airport Hire**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 186 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்வதற்கும், வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை இரண்டு இலட்சம் (200,000) மட்டும்.

தொடர்பு: **077 6585 999**
**076 4385 814**
**077 8748 135**

(CS 20482 A) 1/6

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான வீதியில் பிரசித்திபெற்ற மண்கும்பான் வீரகத்தி பிள்ளையார் கோயில் அருகாமையில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- சாட்டி கடற்கரைக்கு செல்லும் பிரதான வீதியில் அமைந்துள்ளது.
- யாழ். நகரிலிருந்து **8 KM** தூரத்தில் உள்ளது.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 4 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும், திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை.**

**தொடர்பு:- ஜெயம்**

**077 8147 389**
**077 2417 589**

(CS 20459) (1/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆவணி 12 ஞாயிற்றுக்கிழமை (28.08.2022) சிகரம் : 114

ரஞ்சனை மட்டும் வெளியே விட்டால்
பஞ்சம் இலங்கையில் பறந்திடுமோ– கொஞ்சம்
கடைக்கண் கருணையேனும் பட்டிடாதோ
அடைபட்டிருக்கும் அரசியல்கைதிகள் மீதினிலே!

- ஒட்டுக்குழுச்சுவாமிகள்

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: சில குறிப்புக்கள்



மருத்துவர் கிறீன் 1848 இல் மானிப்பாயில் ஆரம்பித்த இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரி - மருத்துவமனை



## மருத்துவர் கிறீனின் யாழ்ப்பாண வருகை!

○ பா. துவாரகன்

அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த 3 ஆவது தகுதிவாய்ந்த மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன். இவரது தந்தை: வில்லியம் கிறீன், தாயார்: யூலியா பிளிம்டன். பதினொரு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கிறீன் 8 ஆவது பிள்ளை. கிறீன் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலத்தின் வூஸ்டா என்னுமிடத்திலுள்ள கிறீன் ஹில் என்னும் கிராமத்தில் 1822 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார்.

கிறீனுக்கு 11 வயது ஆகும் போது அவரது தாய் யூலியா காலமானார். மூத்த சகோதரியின் அரவணைப்பில் வளர்ந்த கிறீன், பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தமது சகோதரிகளிடமும் தந்தையாரிடமும் வீட்டிலே கற்றுத் தேறினார். கிறீன் பொதுவாகவே உடல்வலிமை குறைந்தவராகக் காணப்பட்டார். வாழ்வின் பல்வேறு காலப்பகுதிகளில் கிறீனுக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டது.

கிறீன் 1841 இல் நியூயோர்க்கிலுள்ள மருத்துவர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கான கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தார். இங்கே மருத்துவக் கல்வியுடன் ஜேர்மன், இலத்தீன், கேத்திரகணிதம், இயற்கை விஞ்ஞானம் மற்றும் தத்துவம் முதலான பாடங்களையும் கற்று, பரந்த அறிவை வளர்த்துக் கொண்டார். கிறீன் மருத்துவ மாணவனாக இருந்த காலப்பகுதியில் ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் இருதடவைகள் அவரது மருத்துவக் கல்வி தடைப்பட்டது; இதனால் மருத்துவக் கல்வியை 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்ய இயலவில்லை; ஓராண்டு தாமதமாகி 1845 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி மருத்துவராகத் தகுதி பெற்றார்.

எப்போதும் ஆன்மிகத்திலும் மிசனரிசேவையிலும் நாட்டமுள்ளவராக விளங்கிய மருத்துவர் கிறீன் ,பிறதேசங்களுக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிசன் பணியகத்துடன் 1846 இல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். இலங்கையில் அமெரிக்க மருத்துவ மிசனரியின் பணியை ஆற்றுவதற்கு விரும்பிய மருத்துவர் கிறீன், தமது விருப்பத்தைக் கடிதம் மூலம், பிறதேசங்களுக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிசன் பணியகத்துக்கு (ABCFM) அனுப்பினார். கிறீனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட அமெரிக்க மிசன் பணியகம் கிறீனுக்கு அனுமதி வழங்கும் நியமனக் கடிதத்தை அனுப்பியது. கிறீன் இந்தக்கடிதத்தை 1846 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பெற்றுக்கொண்டார்.

அனுமதிக் கடிதம் கிடைத்ததும் கிறீன் இலங்கைப் பயணத்துக்கான ஆயத்தங்களையும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச்செல்ல வேண்டிய பொருட்களைக் குறித்தும் வினவி, அமெரிக்க மிசன் பணியகத்துக்குக் கடிதம் வரைந்தார்.

கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, மற்றும் ஜேர்மன் முதலான மொழிகளைக் கற்றிருந்த கிறீன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு முன்பே அமெரிக்காவிலே தமிழ்மொழியைக் கற்க விரும்பினார். 1833-1843 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலே அமெரிக்க இலங்கை மிசனில் கடமையாற்றியவரும், நியுஜெர்சியில் வசித்துவந்தருமான வண. சாமுவேல் ஹச்சிங்ஸ் அவர்களிடம் சில வாரங்கள் தமிழ் படிப்பதற்கு விரும்பினார். இதற்கான அனுமதியைக் கேட்டு அமெரிக்க மிசன் பணியகத்துக்குக் கடிதம் வரைந்தார்; ஹச்சிங்ஸை சந்தித்து உரையாடியும் வந்தார்.

கிறீன் யாழ்ப்பாணத்தில் தனக்கு ஏற்படும் இன்றியமையாத செலவுகளையும், ஏற்கனவே தாம் பயணத்துக்கு தயார் செய்த போது ஏற்பட்ட செலவுகளையும் குறித்துக் கணக்கு அறிக்கையைத் தயாரித்து அமெரிக்க மிசன் பணியகத்துக்கு அனுப்பியிருந்ததோடு, அமெரிக்காவிலிருந்து குதிரை வண்டில் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதியும் பெற்றிருந்தார்.

1840 களில் யாழ்ப்பாணத்திலே குதிரை ஒன்றின் விலை 100 அமெரிக்க டொலர்; அதே வேளை அமெரிக்காவிலே தரம் வாய்ந்த கை மணிக்கூடு ஒன்றின் விலை 25 அமெரிக்க டொலர்.

கிறீன் அமெரிக்காவின் போஸ்டன் துறைமுகத்திலிருந்து "ஜேக்கப் பேர்க்கின்ஸ்" என்ற கப்பலில் இலங்கையை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார். நீண்ட கடற்பயணத்தின் போது தமிழ்மொழியைக் கற்பதற்காக தமிழ் இலக்கண நூல் ஒன்றை எடுத்துச் செல்ல விரும்பி அமெரிக்க மிசன் சங்கத்துக்கு விண்ணப்பித்தார். எனினும் சில




மனுஷவங்காதிபாதம் 1872 இல் மானிப்பாயில் உள்ள ஸ்திரோங் & அஸ்பரி அச்சுக்கூடத்தில் அமெரிக்க இலங்கை மிசனுக்காக அச்சிடப்பட்டது.


தினங்களில் திரு. கிரேன் என்பவரிடம் இருந்து தமிழ் இலக்கண நூல் ஒன்று கிறீனுக்குக் கிடைத்தது. இதனை அமெரிக்க மிசன் சங்கத்துக்குக் கடித மூலம் தெரியப்படுத்தினார். மருத்துவர் கிறீன், போஸ்ரன் துறைமுகத்திலிருந்து 1847 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி "ஜேக்கப் பேர்க்கின்ஸ்" என்ற கப்பலில் யாழ்ப்பாணம் நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை ஆரம்பித்தார். அந்தக் கப்பல், அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைத் தாண்டி இலங்கைத் தீவைச் சுற்றிச் சென்று 1847 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி சென்னையை அடையும் வரை நான்கரை மாதங்கள் எங்குமே தரிக்கவில்லை.

கப்பல் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை அண்மித்தபோது மிகக் கடுமையான புயல் தாக்கியதால் கவிழும் நிலைக்குச் சென்றது. இதன்போது கிறீன் காயமடைந்தார். கப்பல் இலங்கைத் தீவைச் சுற்றி பயணித்த போது தீவின் அழகையும் அமைப்பையும் கிறீன் பார்வையிட்டவாறு சென்றார். மருத்துவர் கிறீன் சென்னையில் அமெரிக்க மிசனரிகளுடன் இரு வாரங்கள் தங்கியிருந்துவிட்டு, 1847 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி பருத்தித்துறை வந்தடைந்தார்.

**மருத்துவர் கிறீனது 200 ஆவது பிறந்த ஆண்டை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருதலுக்கான சொற்களின் பொழிவு:**

1. அமெரிக்க மிசனரி மருத்துவரான சாமுவேல் பிஸ்க் கிறீன் இலங்கையில் முதலாவது மேலைத்தேச மருத்துவக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் 1848 இல் நிறுவினார். இதுவே தென்கிழக்காசியாவில் நிறுவப்பட்ட முதலாவது மேலைத்தேச(அலோபதி) மருத்துவக் கல்லூரியாகக் கருதப்படுகிறது.
2. மருத்துவர் கிறீன் தமிழ்மொழியை ஆழமாகக் கற்றுத் தமிழில் சொற்பொழிவாற்றவும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவும் கலைச்சொல்லாக்கவும் வல்ல தமிழ்ப் புலமையாளர்.
3. கிறீன் ஆங்கில மொழியிலிருந்த 8 பிரதான மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்ததுடன் வேறு சில அறிவியல் நூல்களையும், கலைச் சொல் அகராதிகள், மருத்துவக் கையேடுகள், கட்டுரைகள் முதலானவற்றை யும் தமிழாக்கம் செய்துள்ளார்; இவை 4500 பக்கங்களில் வெளிவந்துள்ளன.
4. மருத்துவர் கிறீன் அவர்களை தமிழின் கலைச் சொல்லாக்க முன்னோடி என்று 'தமிழக மற்றும் ஈழ' நாட்டுத் தமிழறிஞர்கள் போற்றுகின்றனர்.
5. உலகிலே முதன் முதலில் 1864 ஆம் ஆண்டு தமிழ்மொழி மூலம் மேலைத்தேச மருத்துவம் மருத்துவர் கிறீன் அவர்களால் இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டது. (The very 1st Tamil medium batch was started in 1864 and taught by Dr. S. F. Green at the Medical School in Manipay).
6. யாழ். போதனா மருத்துவமனையானது யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சேர். பெர்சிவல் ஒக்லண்ட் டைக் அவர்களால் 1850 இல் ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவர் கிறீன் அவர்களே இம் மருத்துவமனையில் கடமையாற்றிய முதலாவது வருகை சத்திரசிகிச்சை நிபுணர் ஆவார். 1850 முதல் 1907 வரையான காலப்பகுதியில் யாழ். போதனா மருத்துவமனையில் (யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி வைத்தியசாலை) கடமையாற்றிய மருத்துவர்களிற் பெரும்பாலானோர் மருத்துவர் கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்களே.
7. தமிழ்நாட்டில் மொழிப்போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் தமிழ்நாட்டில் அனைத்திலும் தமிழுக்கே முதலிடம் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. தமிழ் மொழியில் அறிவியலும் மருத்துவமும் கற்பிக்கப்படல் வேண்டும் என்ற கல்விக்கொள்கை முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டிலே தமிழில் ஆங்கில மருத்துவத்தைப் கற்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்மொழிந்த போது, திராவிட இயக்கத் தலைவர்களால் தமிழ்நாட்டின் நடமாடும் பல்கலைக்கழகம் என்று போற்றப்பட்ட நாவலர் இரா. நெடுஞ்செழியன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நாம் இப்போது தான் தமிழிலே அறிவியலை, மேலைத்தேச மருத்துவத்தைக் கற்பிப்பது பற்றிச் சிந்திக்கின்றோம். ஆனால் சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலே ஓர் அமெரிக்கர் தமிழில் மேலைத்தேச மருத்துவத்தைக் கற்பித்தார் என்ற செய்தியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்."




சாமுவேல் பிஸ்க் கிறீனது கல்லறை (இடது புறம் தெளிவுக்காக எழுத்துக்கள் ஒளியூட்டப்பட்ட படம் இணைக்கப்பட்டுள்ளது)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிதி கிடைக்குமா?



அ.நிக்ஸன்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னரான இலங்கைத்தீவின் பொருளாதார நிலைமை அடுத்த இரண்டு வாரங்கள் தீர்மானமிக்கதாக அமையும்' என வடமேல் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப்பீடத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா, பி.பி.சி செய்திச் சேவைக்குக் கூறியுள்ளார். அதிகளவு கடன் வழங்கிய சீன அரசு, இலங்கைக்கு மேலும் கடன் வழங்கவும் வழங்கிய கடன்களை மீளப் பெறுவதற்கும் விதிக்கப்படும் நிபந்தனைகள் இலங்கைக்கு மேலும் சிரமத்தைக் கொடுத்துள்ளதாகக் கருதப்படும் நிலையில் இப்படியொரு கருத்தை பேராசிரியர் வெளியிட்டிருக்கிறார்.

"இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டுமானால், நிலையான மத்திய வங்கி வேண்டும். சுதந்திரமாகவும் நடைமுறை ரீதியாகவும் சிந்திக்கக்கூடிய மத்திய வங்கி ஆளுநர் ஒருவர் தேவை" என்றும் அவர் சொல்லியுள்ளார்.

அதாவது கடந்த இரண்டு வருடங்களில் மாறி மாறிப் பதவியில் இருந்த மத்திய வங்கியின் ஆளுநர்கள் உரிய முறையில் பொருளாதார ஆலோசனைகளை முன்வைக்கத் தவறியுள்ளனர் என்ற தொனியில் அவர் கருத்துரைத்துள்ளார்.

இந்த நிலையில், கொழும்புக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் கொழும்

## சர்வதேச நாணய நிதியத்தைக் கட்டுப்படுத்தும் சீனா

பில் சந்திப்புக்களை நடத்தியபோதும், பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் பலவற்றை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை என அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் புதன்கிழமை நடத்திய உரையாடல்களில் சர்வதேச நாணய நிதியத்துக்கு திருப்தி இல்லையென நிதியமைச்சின் தகவல்கள் கூறுகின்றன. கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கமோ, சர்வதேச நாணய நிதியமோ அதிகாரபூர்வமாக ஊடகங்களுக்கு எதுவுமே தெரிவிக்கவில்லை. ஆனாலும் சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்துள்ள கடும் நிபந்தனைகளுடன் கடன் திட்டங்களை இலகுபடுத்துமாறு இலங்கை கோரியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

இலங்கையின் நிதி மற்றும் சட்ட ஆலோசனைக்காக வெளிநாடுகளில் இருந்து அமர்த்தப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தியுள்ளனர். ஆனாலும் அரச சேவையில் இருந்து குறைந்தது ஒரு இலட்சம் பேரையாவது உடனடியாகப் பணியில் இருந்து நிறுத்தும் திட்டத்துக்கு அரசாங்கம் தயக்கம் காண்பிக்கின்றது என்ற தகவலும் வெளியாகியிருக்கிறது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களும் நம்பிக்கை தரவில்லை என்றே பிரதிநிதிகள் கூறுகின்றனர். இலங்கையின் ஸ்திரமற்ற அரசியல் நிலைமையாலும், எதிர்க்கட்சிகள் பொருளாதாரத் திட்டங்களை அரசியலாக்கி மக்கள் மத்தியில் தவறான பிரசாரங்களைச் செய்வதாலும், அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்வது கடினம் என்ற கருத்தை சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சுமார் இருபத்து ஒன்பது பில்லியன் டொலர் என்று நிதியமைச்சின் தகவல்கள் கூறுகின்றன. ஆனால் 28 பில்லியன் டொலர் என்று ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார். கடன் தொகை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், கடந்த மூன்று மாதங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு இரண்டாவது தடவையாகவும் பயணம் செய்திருக்கின்றனர்.

தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு நிவாரணம் பெற ,சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கை மூன்று பில்லியன் டொலரை எதிர்பார்க்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள ஆலோசகர்களான லாசாடஸ், (Lazards) கிளிபோர்ட் (Clifford) ஆகிய பிரதிநிதிகளுடனும் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கை செலுத்த வேண்டிய இருதரப்புக் கடனின் அளவு சுமார் 9.6 பில்லியன் டொலர், சர்வதேச இறையாண்மைப் பத்திரங்கள் மற்றும் தனியார் கடன்களின் தொகை 19.8 பில்லியன் டொலர் என நிதி அமைச்சின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இலங்கை தனது இருதரப்புக் கடனில் பெரும்பகுதியை ஜப்பான், சீனா ஆகிய இரண்டு நாடுகளுக்குமே செலுத்த வேண்டியுள்ளது. இவற்றில் சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடன் கடந்த மூன்று வாரத்துக்கு முன்னர் 3.5 பில்லியன் டொலராக இருந்தது. அத்துடன் இந்த இரு நாடுகளிடம் இருந்து பெறப்பட்ட கடன்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் ஐந்தில் ஒரு பங்கு சீனாவிடம் உள்ளதாகவே தெரிகின்றது. இலங்கை உடனடியாகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இன்று வரை 160 மில்லியன் அமெரிக்க டொலரை அவசர தேவைக்காக வழங்கியுள்ளதாக உலக வங்கி கூறுகின்றது. உலக வங்கியின் இந்த உதவிகள் குறித்தும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட சந்திப்புகளில் பேசப்பட்டிருக்கின்றது. அத்தியாவசிய மருந்துப் பொருள்கள், கல்விச் செயற்பாடுகள் குறித்த செலவினங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு உடனடிக் கடனாக உலக வங்கி இந்தத் தொகையை வழங்கியுள்ளது.

ஆனால் இலங்கையின் நிலையற்ற அரசியல் செயற்பாடுகள் தொடர்பான அச்சம் கலந்த எச்சரிக்கை ஒன்றையும் உலக வங்கி விடுத்திருக்கின்றது. இந்தப் பின்புலத்திலேதான் எதிர்வரும் ஆறு மாத காலத்துக்குள் கடுமையான பிரச்சினைகளை இலங்கை எதிர்நோக்க நேரிடுமென இலங்கையின் பொருளாதார நிபுணரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். "எதிர்க்கட்சி உறுப்பினர்களின் எச்சரிக்கை பொய்யானவை. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நட்பு நாடுகள் உதவியளிக்கத் தயாராக உள்ளன" என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர கொழும்பில் செய்தியாளர் மத்தியில் கூறியிருக்கிறார். இந்த நிலையிலேதான் இலங்கையின் கடன் தொடர்பாக அபாய எச்சரிக்கை விடுத்து வரும் அமெரிக்கப் பொருளாதா நிபுணர் [illegible] சீனா மறுத்துள்ளது. "சீனா [illegible]னவும், அந்தக் கடன்கள்தான் இலங்கையை அதலபாதாளத்துக்குள் தள்ளிவிடக்கூடும் என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது. ஆனால் அந்தக் கருத்துத் தவறானது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜியன் ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் உண்மையான நிதி நிலைமை என்பது சீனாவின் அதிகரித்த கடன் திட்டங்களும், அதிகளவு வட்டியுடன் கூடிய குறுங்கால கடன்களும் இலங்கையின் கழுத்துவரை நிற்பதுதான்" என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் கூறுகிறார். அதாவது இலங்கைக்குக் கடன் வழங்கும் சர்வதேச நாணய நிதியத்தின் புதிய திட்டங்களில் சீனாவின் தாக்கம் அதிகரித்துள்ளதை அந்தப் பிரதிநிதி ஒப்புக்கொள்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்தப்பட்ட சந்திப்பில் சீனாவின் ஆதிக்க நிலைமை பற்றிச் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துக் கூறியிருந்தனர். இதன் பின்னணியிலேயே சீனா தனது கடன் திட்டங்களிலும் வட்டி வீதக் குறைப்புகளிலும் சலுகை வழங்க வேண்டுமென ரணில் விக்கிரமசிங்க, ஜப்பான் ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதேவேளை சர்வதேசக் கடன் மதிப்பீட்டு நிறுவனமான 'பிரிஜ் ரேட்டிங்க்ஸ்' நிறுவனம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாதென்ற கருத்தை வெளியிட்டுள்ளது. இந்த நிறுவனம் அமெரிக்காவின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேசக் கடன் மதிப்பீட்டு நிறுவனமாகும். ஆகவே இந்த நிறுவனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் ராஜபக்சவை மையப்படுத்திய ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு இலங்கை நாடாளுமன்றத்தில் கூடுதல் செல்வாக்கு இருந்தாலும், மக்கள் மத்தியில் அந்தக் கட்சிக்கு ஆதரவு இல்லை என்று இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் விவரித்துள்ளது. இதனால் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் அமெரிக்க - இந்திய அரசுகள் வழங்கும் கடன்களை மீளப் பெறும் உத்தரவாதம் தொடர்பாகவும் பிரிஜ் ரேட்டிங்ஸ் நிறுவனம் சந்தேகம் கொண்டுள்ளது. அதாவது வழங்கப்படவுள்ள கடனுதவிகளில் பெருந்தொகையை இலங்கை , சீனாவிடம் பெற்ற கடனை அடைக்கப் பயன்படுத்தும் என்ற தொனியே பிரிஜ் ரேட்டிங்ஸ் நிறுவனத்தின் சந்தேகத்தில் வெளிப்படுகின்றது.

ஆகவே கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் விவகாரங்களில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்தும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்றும் இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட முப்பத்து ஒன்பது அரச நிறுவனங்களில் குறைந்தது பன்னிரண்டு அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துதல், ஆறு இலட்சத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களைப் பணியில் இருந்து இடைநிறுத்துதல் போன்ற பரிந்துரைகளுக்கான அங்கீகாரங்களை இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது கடினமான காரியம் என்றே கருதப்படுகின்றது.

பிரிஜ் ரேட்டிங்க்ஸ் நிறுவனத்தின் பரிந்துரைகளின் மூலமே இலங்கைக்குக் கடன் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு. இதனால் கட்டாயம் நிதி கிடைக்குமென இலங்கை கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக எதிர்ப்பார்த்திருந்தது. ஆனால் இலங்கையின் சமகால பொருளாதார உத்திகள் நம்பிக்கை தருவதாக இல்லை என்றே நிதி வழங்கும் சர்வதேசப் பிரதிநிதிகள் கூறியிருக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமாயின், இலங்கைக்கு மூன்று அல்லது மூன்றரை பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும். அதாவது வருடமொன்றுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வீதம் கிடைக்கும். எனினும், அது கிடைக்கும்வரை அத்தியாவசியப் பொருள்களை எவ்வாறு இறக்குமதி செய்வது என்பது தொடர்பாகவே இலங்கை தற்போது தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. அப்படியும் நிதி கிடைக்காவிட்டால், இலங்கையின் நிலை 'ததிங்கிணத்தோம்' தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் பலமடைந்து வருகிறாரா?

○ நிலாந்தன்

பயங்கரவாத தடைச் சட்டம் அரகலயவின் மீது பாயத் தொடங்கிவிட்டது. "மனித உரிமைகள் பாதுகாவலர்களான வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்மா தேரர் ஆகியோர் இலங்கையின் பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். அவர்களை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திடவேண்டாம் என ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொள்கின்றேன், அவ்வாறு செய்வது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும்" என்று மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தார். மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்பாட்டாளர்கள் தொடர்பான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் அவர். எனினும், அந்த இருண்ட நாளை அவரால் தடுக்க முடியவில்லை.

கடந்த 21ஆம் திகதிவரை மொத்தம் 3353பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1255 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.



முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைத்த 'அரகலயவின்' பிரதான செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதிகளாகக் கணிக்கப்படும் ஒரு நிலைமை ஏன் வந்தது? அரசியல் எதிர்ப்பை ஆக்கத்திறனோடு வெளிப்படுத்திய படைப்பாளிகள் குற்றவாளிகளாக வேட்டையாடப்படும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது?

காரணம் அரகலய மீண்டும் தோற்றம் பெறக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை. அரகலயவை உற்பத்தி செய்த பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தும் முற்றாக அகற்றப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபின் எரிவாயு , எரிபொருள் போன்றன ஒப்பீட்டளவில் கிடைக்கத் தொடங்கிவிட்டன. நாட்டில் இப்பொழுது நீண்ட வரிசைகளைக் காண முடிவதில்லை. இது ஒரு காட்சி மயப்படுத்தப்பட்ட கவர்ச்சியான மாற்றம். ஆனால் பொருள்களின் விலைகள் இறங்கவே இல்லை. அரசாங்கம் முட்டையின் விலையை நிர்ணயித்த போதிலும் சந்தையில் முட்டையின் விலை இறங்கவே இல்லை. அரசாங்கத்தின் விலை நிர்ணயங்கள் மக்களைக் கவரும் நோக்கிலானவையே தவிர யதார்த்தமானவை அல்ல என்று வியாபாரிகள் குற்றம் சாட்டுகிறார்கள்.

மண்ணெண்ணெயின் விலை அதிகரித்துவிட்டது. அது விவசாயிகளாலும் கடற்தொழிலாளர்களாலும் தாங்க முடியாத அதிகரிப்பு. எனவே கீழ் ,மத்தியதரவர்க்கம் மற்றும் ஏழைகளால் நுகரமுடியாத அளவுக்கு விலைகள் உச்சத்தில் நிற்கின்றன. இது மக்களை எப்பொழுதும் தெருவுக்குக் கொண்டு வரக்கூடியது. அனைத்துலக நாணயநிதியத்தின் உதவிகள், சீனாவின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முடிவுகளில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் ஈடுபடுவதை தடுப்பதற்கு முன்னணிச் செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ளே போட வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. அதாவது ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் மீண்டும் தோன்றலாம் என்ற ஆபத்தை அவர் முன்னுணர்கிறார். இது முதலாவது பிரதான காரணம்.

இரண்டாவது காரணம் ,மே ஒன்பதாம் திகதியும் ஜூன் 9 ஆம் திகதியும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் சொத்துக்களையும் வீடுகளையும் தேடித்தேடி எரித்து அழித்தவர்களைப் பழிவாங்குவது. மீண்டும் ஒரு தடவை ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளைத் தாக்கத் துணியாதபடி அவர்களை அச்சுறுத்த வேண்டும். அதற்காகத்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அவர் உபயோகித்திருக்கிறார். அதாவது தன்னைப் பாதுகாத்த 134 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை அவருக்குண்டு.









பொருளாதார நெருக்கடியை நீக்கினால் பிரச்சினைகளின் மூலகாரணம் பலவீனமடைந்துவிடும் என்று நம்புகிறார். பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது என்று சொன்னால் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவது என்று சொன்னால் எதிர்க்கட்சிகளையும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடிய மக்களையும் சமாளிக்க வேண்டும். அதற்கு, சர்வ கட்சி அரசாங்கம் ஒரு கவர்ச்சியான தீர்வு. ஆனால் தந்திரசாலியான ரணிலை நம்பி அரசாங்கத்தில் இணைய எதிர்க்கட்சிகள் தயாரில்லை. இந்த வாரமும் இதுகுறித்து சஜித் பிரேமதாஸவோடு ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க சஜித் அணி தயாராக இல்லை. ரணிலோடு இணைந்தால் அவர் தன்னுடைய அணியைக் விழுங்கிவிடுவார் என்று சஜித் பயப்படுகிறார். வெளியில் இருந்து ஆதரவு தரலாம் என்று சில நாள்களுக்கு முன் நடந்த சந்திப்பில் கூறி இருக்கிறார். ஜே.வி.பி.யும் அவ்வாறு சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு தயார் இல்லை. தமிழ்க் கட்சிகளும் பெருமளவுக்கு ஒத்துழைக்கும் நிலையில் இல்லை.

எனவே ஒரு சர்வகட்சி அரசாங்கத்துக்கான வாய்ப்புக்கள் குறைவாகத்தான் தெரிகின்றன. மாறாக எதிர்த் தரப்பிலிருந்து தனக்கு ஆதரவான ஆள்களை கழற்றி எடுக்கும் வேலையை ரணில் செய்யலாம். அதை அவர் ஏற்கனவே தொடங்கிவிட்டார். அது அவருக்குக் கைவந்த கலை. ஆனால் அவ்வாறு உருவாக்கப்படும் ஓர் அரசாங்கம் எதிர்க்கட்சிகளாலோ அல்லது மக்களாலோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்காது.

தாமரை மொட்டுக் கட்சியைப் பாதுகாக்க வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. ரணிலைப் பாதுகாக்க வேண்டிய தேவை தாமரை மொட்டுக்கு உண்டு. எனவே ஒருவர் மற்றவரில் தங்கியிருப்பார்கள். இது எதுவரை என்று சொன்னால், அடுத்த பெப்ரவரி மாதம் வரையிலும். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தோடு யாப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ரணிலுக்கு கிடைத்துவிடும். அவ்வாறு கிடைத்தால் அதற்குப்பின் நடக்கக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தாமரை மொட்டுக்கட்சி இப்பொழுது அனுபவிக்கும் பெரும்பான்மையைப் பெறமுடியுமா என்பது சந்தேகமே. எனவே வரும் பெப்ரவரி மாதத்தோடு தனது பேரம் கீழிறங்கி விடும் என்று தாமரை மொட்டுக் கட்சிக்குத் தெரியும். தன்னுடைய பேரம் அதிகமாகி விடும் என்று ரணிலுக்கு தெரியும். எனவே அவர் திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறார்.

அடுத்த ஆறுமாத காலத்துக்குள் அவர் தன்னை பலப்படுத்த வேண்டும். ஐ.தே.க . வைப் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னால் சஜித் பிரேமதாஸவை பலவீனப்படுத்த வேண்டும். ஒன்றில் அவரை வழிக்குக் கொண்டு வர வேண்டும். அல்லது தோற்கடிக்க வேண்டும்.

அடுத்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னரும் அவர் நாடாளுமன்றத்தை கலைப்பாரா என்பது சந்தேகம்தான். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் நாடாளுமன்றம் பெருமளவுக்கு அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தாமரை மொட்டின் பெரும்பான்மை , பெருமளவுக்கு அவருக்கு கட்டுப்பட்டது போலாகிவிடும். அதன் பின் அவர் விரும்பியபடி காய்களை நகர்த்தலாம். இந்த இடைப்பட்ட காலகட்டத்துக்குள் அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையும், மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தக்கூடும். தேர்தல் முடிவுகள் தாமரை மொட்டுக்கு பாதமாக அமையும். இப்பொழுது உள்ளூராட்சி மன்றங்கள் பெருமளவுக்கு தாமரை மொட்டின் கட்டுப்பாட்டுக்குள்தான் காணப்படுகின்றன. ஆனால் ஒரு புதிய தேர்தல் நடந்தால் தாமரை மொட்டு அந்தப் பலத்தை இழக்கக் கூடும். அதேபோல மாகாண சபைகளுக்கான தேர்தலும் தாமரை மொட்டின் வீழ்ச்சியைக் காட்டக்கூடும். எனவே புதிய உள்ளூராட்சி மன்றங்களும் புதிய மாகாண சபைகளும் தமது பலவீனத்தை வெளிப்படுத்தலாம் என்ற அச்சம் தாமரை மொட்டுக்கு உண்டு.

அதனால்தான் நாடாளுமன்றம் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் கலைக்கப்படுவதை எப்படித் தடுக்கலாம் என்று தாமரை மொட்டுக் கட்சி சிந்திக்கின்றது. ரணில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் 22 வது சட்டத் திருத்த வரைவில், 19 ஆவது திருத்தத்தில் உள்ளபடி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதற்கான கால எல்லையை நாலரை ஆண்டுகளாக மாற்றும் ஏற்பாடு இணைக்கப்படவில்லை. இருபதாவது திருத்தத்தில் உள்ளபடியே இரண்டரை ஆண்டுகளில் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்று உள்ளது. இது தாமரை மொட்டைத் தன் பிடிக்குள் வைத்திருப்பதற்கு ரணில் செய்யும் தந்திரம் என்று அந்தக்கட்சி நம்புகிறது.

அதனால்தான் சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் கலைக்கப்படும் காலத்தை 19 இல் உள்ளதுபோல மாற்றுமாறு அண்மையில் ரணிலுக்கு கடிதம் கொடுத்திருந்தார்கள். அவர்களை சமாளிப்பதற்காக ரணில் இப்போதைக்கு பொதுத்தேர்தல் இல்லை என்று அறிவித்திருக்கிறார்.

அவர்களைச் சமாளிப்பது என்பதைத் தவிர, வேறு ஓர் உள்நோக்கமும் அவரிடம் இருக்கலாம். பெப்ரவரி மாதத்தின்பின் ஒப்பீட்டளவில் தனக்கு அதிகம் கட்டுப்படும் நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு, தன் எஞ்சிய ஆட்சிக் காலத்தை எப்படிக் கடக்கலாம், தனது சொந்தக் கட்சியை எப்படி மீள இணைக்கலாம் என்று அவர் திட்டமிடுவார்.

ஒரு தேர்தல் நடந்தால் முடிவுகள் தாமரை மொட்டுக்குப் பாதகமாகவும் எதிர்கட்சிகளுக்குச் சாதகமாகவும் அமையக் கூடும். ஆனால் ஐ.தே..க.வுக்கு அது எப்படி அமையும் என்று இப்பொழுது கூறுவது கடினம். ஏனென்றால் ஐ.தே.க. இப்பொழுது இரண்டாக உடைந்து கிடக்கிறது. எனவே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் அது எதிரிகளுக்கு சாதகமாக அமையும் என்று ரணில் அஞ்சுகிறார். அதனால் அவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் ஒரு புதிய தேர்தலை நடத்தவும் தயாராக இருக்க மாட்டார்.


எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ரணிலுக்கு விருப்பமில்லை. வரும் பெப்ரவரி மாதத்தின் பின் தாமரை மொட்டுக் கட்சியானது அவரில் தங்கி இருக்கும் நிலைமைகள் மேலும் அதிகரிக்கும். அந்த நிலையை அப்படியே பேணியபடி அவர் தன்னுடைய பதவிக் காலத்தை முடிப்பதற்கிடையில் ஐ.தே.க. வை எப்படிப் பலப்படுத்தலாம் என்று திட்டமிடலாம்.

எனவே சஜித்தை எப்படி வளைத்தெடுப்பது என்பதே அவர் முன் உள்ள சவால். சஜித்தை வளைத்து எடுத்தால் ரணிலுக்கு இரட்டை லாபம் உண்டு. அதன் மூலம் ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கலாம். அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியத்துக்கு வெளிக்காட்டலாம். இரண்டாவது சஜித்தை தோற்கடித்து விட்டால் அல்லது சஜித்தை வழிக்கு கொண்டு வந்துவிட்டால் ஐ.தே.க. மீள இணைந்துவிடும். அதன் மூலம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் போன்றவற்றில் ரணில் முன்னரை விடப் பலமாகக் காணப்படுவார். எனவே இப்பொழுது ரணிலுக்கு உள்ள சவால், சஜித்தை எப்படி வளைப்பது என்பதுதான். ஒரு புதிய தேர்தலுக்குப் போக அவர் தயாரில்லை. ஏனெனில், ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார கேட்பது போல "134 எம்பிக்களா? அல்லது மக்களா?" என்ற கேள்விக்கு விடை கிடைக்கக் கூடிய ஒரு தேர்தலை நடத்த அவர் துணியமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

98



அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. பழக்கதோஷம் 5. கணிதத்தில் இதுவும் இருக்கும். 7. நெருக்கமாக 8. ஒருவகை ஆட்டம் 9. பழுத்தல் 11. புடைவை 13. முகவரி 15. நோவு 17. மழைகாலம் என்றால் இதுவும் வந்துவிடும் 18. நாயன்மார் பாடியது 21. நண்பகல் வேளை 22. நிணம் 23. சுவர் 24. பொக்கிஷக்காரன்

### மேலிருந்து கீழ்

1. எங்கள் நாட்டிலும் இல்லை. இது பிறநாடுகளிலும் இல்லை என்பார்கள். 2. உயிர்ப்பின் ஆரம்பம் 3. கொடுக்கல் மறுபக்கத்தில் 4. இராமாயணத்தில் கூனிபோன்று மகாபாரதத்தில் இவள் 5. மறைவில் தீட்டுவது. 6. செருக்கு 8. கூடிக்களித்தல் 10. அந்தரி 12. பீதி 14. ஒரு கிரகம் 16. பழைய அல்ல 18. விடை 19. கட்டடப் பணியில் இதுவும் அவசியமானது 20. திருமணம் செய்யாத இளம்பெண் 21. அறிவு 22. ஒரு நிறம்

### சொற்சிலம்பம் போட்டி 97 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆசீர்வாதப்பர் 6.பனி 7. கட 8. உடம்பு 11. பாரதம் 12. கவரி 13. பாழ் 14. தரம்பிரி 17. எண் 18. வதி 19. உண்ண 20. சின்னண்ணன்

**மேலிருந்து கீழ்**

1.ஆபத்பாந்தவன் 2.சீனி 3. வாகடம் 4. தடம் 5. பல 8. உதரம் 9. புகழ் 10. பெரியண்ணன் 13. பாரி 15. ரதி 16. பிறன் 17. எண்ண 19. உண்

**சொற்சிலம்பம் போட்டி இல.98**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

02.09.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 97 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

**1 ஆம் பரிசு**
**சி.பிரணவி**
187 உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்**
வட்டுக்கோட்டை


**3 ஆம் பரிசு**
**ந.பானுமதி**
பிரதேச மருத்துவமனை
மருதங்கேணி

**4 ஆம் பரிசு**
**ஆ.ருக்மணிதேவி**
புத்தூர்.

**5 ஆம் பரிசு**
**ஸ்ரீ.லக்சன்**
13 உயிரியல் பிரிவு
யாழ்.மத்திய கல்லூரி

---

இராகவன்



# ஊர்ப்புதினம்

அரிக்கன் லாம்பில, ஸொறி ஹரிக்கேன் லாம்பில தொடங்கின கதை எங்கையெல்லாமோ போகிட்டுது. ம்.. சரி இப்ப விசயத்துக்கு வருவம். பஞ்சு மாமாவின்ர கலியாண வீட்டுக்குப் போகிட்டு வந்த அலுப்பில வீட்டு முன்விறாந்தையில படுத்திருந்த என்னைக் ஹரிக்கேன் லாம்போட வந்து அம்மா எழுப்பினா. எனக்கு நித்திரை குழப்பினது சரியான சினமாக் கிடந்திச்சுது. "என்னணை? ஏன் இப்ப எழுப்பினனீ?" எண்டு எரிச்சலோட கேட்டன்.

"ஏன் எழுப்பினதோ? அங்கை பஞ்சுமாமா எங்கை என்ர மருமோனைக் காணேல்ல. போட்டோ எடுக்கக்கூட்டிக் கொண்டு வாங்கோ எண்டு விடாப்பிடியா நிக்கிறார். அதுதான் முகத்தைக் கழுவித் தலையை இழுத்துப் பவுடரைப் போட்டுக் கொண்டு வெளிக்கிடு" எண்டா.

எனக்கெண்டால் போட்டோ எடுக்க துப்பரவா மனமில்லை. "ம்... நான் வரேல்ல போணை" எண்டுட்டுத் திரும்பவும் படுக்க வெளிக்கிட்டன். அதுக்கிடையில வசந்தியக்கா வந்து "உப்பிடிச் சொல்லக்கூடா. என்ன பழக்கமுது? அங்கையெல்லாம் வெளிக்கிட்டு ரெடியா உன்னைப் பாத்துக் கொண்டு நிக்கினம். வேலைவைக்காமல் வெளிக்கிடு பாப்பம்" எண்டு சொன்னாப் போல வேறை வழியில்லாமல் ஒருமாதிரி எழும்பி வெளிக்கிட்டுப் போனன். உண்மையா அங்கை எல்லாரும் என்னைப் பாத்துக் கொண்டுதான் நிண்டவை. என்னைக் கண்டோடன பஞ்சுமாமா "ம்... இந்தா என்ர மருமோன் வந்திட்டான். எல்லாரும் வாங்கோ! எங்கை செல்வண்ணை? வந்து ரண்டு 'கிளிக்' அடியுங்கோ!" எண்டு ஆரவாரப்பட்டார். என்னைக் கண்டுட்டுப் பஞ்சுமாமி, அதுதான் செல்வராணியக்கா ஒரு சிரிப்புச் சிரிச்சா. எனக்குச் சரியான சங்கையீனமாப் போச்சு. உடனை போட்டோச் செல்வண்ணை வந்திட்டார்.



> செல்வண்ணை கொஞ்சக்காலம் சவூதியில நிண்டவர். அங்கையிருந்து வரேக்குள்ள கமரா றிக்ஸைக் கற்றுக் கொண்டு வந்து, மல்றி இமேஜில போட்டோக்களை எடுத்து அசத்தத் தொடங்கினார். அந்தமூட்டம் அவர் எடுத்த போட்டோக்களெல்லாம் எங்களுக்குப் புதினமாயிருக்கும்.

இந்தவிடத்தில போட்டோச் செல்வண்ணையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோணும். 1980 தொடங்கி 1990 வரை ஒரு பத்து வரியம் அதாவது ஒரு தசாப்தகாலம் எங்கடை ஊரின்ர பாலுமகேந்திராவாகவும், முடிசூடா மன்னனாகவுமிருந்தவர் போட்டோச் செல்வண்ணைதான். இவரைப் பற்றி ஊர்ப்புதினத்தில ஒருக்கா லைற்றாச் சொல்லியிருக்கிறன். செல்வண்ணையைப் பார்த்தால் முன்பின் தெரியாதாக்கள் அவரை ஒரு சிங்களப் பொடியன் எண்டுதான் நினைப்பினம்.

எப்ப பாத்தாலும் மொழுமொழெண்டு கிளின் சேவில ஹிந்தி அக்ரர் மாதிரித் திரிவார். இவரில எங்கடை சிங்கள நடிகர் விஜயமாகுரதுங்கவின்ர சாயலுமிருக்கு. செல்வண்ணை கொஞ்சக்காலம் சவூதியில நிண்டவர். அங்கையிருந்து வரேக்குள்ள கமரா றிக்ஸைக் கற்றுக் கொண்டு வந்து, மல்றி இமேஜில போட்டோக்களை எடுத்து அசத்தத் தொடங்கினார். அந்தமூட்டம் அவர் எடுத்த போட்டோக்களெல்லாம் எங்களுக்குப் புதினமாயிருக்கும். ஒரு போட்டோவிலேயே ஆக்களை 'டபிளா' எடுத்தார். சாமத்திய வீடெண்டால் சாமத்தியப் பொம்பிளையை எட்டு உருவத்தில எடுத்தார். கலியாண வீடெண்டால் மாப்பிளை, பொம்பிளையைத் தனித்தனியாவும் சோடியாயும் இதே மாதிரி மல்ரி இமேஜில எடுத்துத் தள்ளினார். இதிலயும் ஒரே ஆளை டபிள் டபிளா எடுக்கிறதுதான் அப்ப பேமஸாயிருந்தது.

நான் அங்கை போனாப் போல போட்டோ செல்வண்ணை என்னைப் பாத்திட்டு "எட இவ்வளவு நேரமும் இந்த மாப்பிளை வாறதுக்கே வெயிற் பண்ணினனீங்கள்? வாங்கோ மாப்பிளை வாங்கோ" எண்டார். எல்லோரும் பெலத்துச் சிரிக்க எனக்கு இன்னும் சங்கையீனமாப்போச்சு. உடனை எனக்கு இடப்பக்கம் றஞ்சி. வலப்பக்கம் பஞ்சுமாமி. றஞ்சிக்குப் பக்கத்தில மீனுக்குஞ்சியம்மா. அவவுக்குப் பக்கத்தில வேலுப்பிள்ளைக் குஞ்சியையா, பஞ்சுமாமிக்குப் பக்கத்தில பஞ்சுமாமா அரிக்கன் லாம்பை (ஹரிக்கேன் லாம்பை) தூக்கிப் பிடிச்சுக் கொண்டு வரிசையாக் கட்டில இருக்க 'ஓகே றெடி! சிரியுங்கோ!'எண்டுட்டு செல்வண்ணை போட்டோ எடுத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505–1948 வரை

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

இவ்வாறு நாங்கள் உரையாடிக்கொண்டிருக்கையில் ஒரு ஆசிரியர் 'நாங்கள் ஆங்கில வகுப்புகளையும் நடத்துகிறோம். நீங்கள் வேண்டுமானால் அவர்களைப் பரீட்சித்துப் பாருங்கள்' என்று சொன்னார். எனது சகோதரன், அவர்கள் அதுவரை கற்றிராத ஒரு விடயத்தைப்பற்றி சிறு விளக்கமளித்தார். எமது கூலிகள் ஓர்கனையும் கொண்டு வந்திருந்தனர். நாங்கள் 'சமயத்துடன் தொடர்பற்ற வகையில் ஒரு பாடலைப் பாட விரும்புகிறோம்' என்று சொன்னதும் ஆசிரியர் வாய் திறக்க முன்னரே மற்றவர்களனைவரும் 'ஓமோம் பாடுங்கள்' என்றனர். நாங்கள் தமிழில் ஒரு பாடலைப்பாடியதும் சிறுவர்கள் எமக்கு நெருக்கமாக வந்தனர்.

நாங்கள் திரும்பி வரும் போது எம்முடன் பிரச்சினைப்பட்ட ஆசிரியரின் கண்களைப்பார்த்தோம். அவருக்கு இரண்டு கண்களும் தெரியாது. அவரது பார்வைக் குறைபாட்டை சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தலாம். நாங்கள் அவரிடம் 'எமது இல்லத்துக்கு வாருங்கள். உங்களது பார்வைக்குறைபாட்டை குணப்படுத்தலாம்' என்று சொன்னோம். அந்த ஆசிரியரை சென்னைக்கு அனுப்பி அவரது பார்வைக்குறைபாட்டை நீக்கினால் இந்தப்பிரதேசத்தில் கிறிஸ்தவத்தின் செல்வாக்கை அதிகரிக்க முடியும்.

குறித்த பாடசாலைக்குச் சென்ற அதே தினம் ஒரு கிராமத்தில் நிலாக்கூட்டத்தையும் நாங்கள் ஏற்பாடு செய்தோம். எமது கூட்டத்தை குழப்புவதற்கென தீவிர இந்துக்கள் அங்கு கூடியிருந்தனர். நல்ல வேளையாக அவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த உயர்சாதி கிறிஸ்தவர் ஒருவரும் எம்முடனிருந்தார். நாங்கள் துன்புறுத்தப்படவில்லை. நானும் எனது சகோதரியும் 'இங்குள்ள பெண்களுக்கு சில நல்ல புதிய விடயங்களைச் சொல்லப்போகிறோம்' என்று சொன்னோம்.


மருதடி விநாயகர் ஆலயத்தோற்றம்

சிறுவர்கள் எமது இல்லத்துக்கு வந்து 'அடுத்த கூட்டத்தை எப்போது நடத்தப் போகிறீர்கள்?' எனக் கேட்கத்தொடங்கினர். அவர்களில் யாருக்காவது சுகவீனம் ஏற்பட்டால் எம்மிடம் ஓடி வருவார்கள்; எங்களால் அவர்களைக் குணப்படுத்தக முடியும் என்பது அவர்களின் நம்பிக்கை. நாங்கள் அவர்களின் நம்பிக்கையை வீணடிப்பதில்லை. இங்குள்ள தேவாலயங்களில் உயர்சாதியினரும், குறைந்த சாதியினரும் சரிசமனாக அமர்ந்து பிரார்த்தனையில் ஈடுபட மாட்டார்கள்; இந்தியாவிலும் இதே நிலை தான். இங்கு சாதிக்கட்டுப்பாடுகள் இறுக்கமாகப் பின்பற்றப்படுகின்றன. பிராமணர் உயர்ந்த சாதி. இவர்கள் சாப்பிட முன்னர் குளித்து விட்டுத்தான் சாப்பிடுவார்கள்; குறைந்த சாதிக்காரரில் தொட்டால் அது அழுக்கு என்று நினைக்கிறார்கள். தாங்கள் உயர்ந்த கலாசாரத்தை உடையவர்கள் என்ற எண்ணம் இவர்களிடம் காணப்படுகிறது. குறைந்த சாதிக்காரர்கள் எப்போதாவது இருந்து விட்டுத்தான் உடைகளைச் சலவை செய்கின்றனர். இவர்களின் நிலை பரிதாபத்துக்குரியது. 'எனது இரண்டு குழந்தைகளுக்கும் உணவு கிடைக்குமாக இருந்தால் நான் கிறிஸ்தவத்தை தழுவத்தயாராக உள்ளேன்' என எம்மிடம் ஒருவர் தெரிவித்தார். வறுமையும் இங்குள்ளவர்கள் கிறிஸ்தவத்தில் இணைந்து கொள்வதற்கு ஒரு காரணமாக உள்ளது.

நாங்கள் எமது சபையில் இணைந்து கொள்பவர்களிடம் குறைந்த சாதிக்காரர்களையும் சரிசமனாக நடத்தும்படி கூறி வருகிறோம். அவர்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் எனவும் அவர்களுக்குச் சொல்லியுள்ளோம். சாதி குறைந்தவர்களை எமது தேவாலயங்களில் சரிசமனாக நடத்துவதில் நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம் என்று சொல்லலாம். உயர் சாதிக் கிறிஸ்தவர்களிடம் குறைந்த சாதி கிறிஸ்தவர்கள் மீது கருணை காட்டுமாறு கூறியுள்ளோம். இப்போது எமது அறநெறிப் பாடசாலைகளில் இரு பகுதியினரையும் சமமாக அமர்த்தி வகுப்புகளை நடத்துகிறோம். தேவாலயங்களிலும் சமமாக அமர்த்தி பிரார்த்தனையில் ஈடுபடுகிறோம். ஆனால் அவர்கள் வாங்குகளில் அமர மறுக்கிறார்கள், நிலத்தில் தான் அமர்ந்திருக்கின்றனர். நாங்கள் வற்புறுத்தினால் அவர்கள் தேவாலயத்துக்கு வராமல் விட்டு விடுகின்றனர். இதனால் நாங்கள் அவர்களுக் குத் தூய பாய்களை வழங்கி அவர்களை இடது புறத்தில் அமரச்சொல்லியுள்ளோம். அவர்களும் மகிழ்ச்சியுடன் அமர்கின்றனர். மானிப்பாயில் உள்ள உயர் சாதிக் கிறிஸ்தவப் பெண்கள் எமக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றனர். சில வேளைகளில் அவர்கள் தேவாலயத்துக்கு வராமல் குறைந்த சாதிக்காரர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலான குறைந்த சாதியினரின் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனாலும், வீடுகளில் கடினமான வேலைகள் இருப்பதனாலும் அவர்களால் பிரார்த்தனை களில் கலந்து கொள்ள முடிவதில்லை.

மானிப்பாய் , மே 01. 1881

நாங்கள் மானிப்பாயை மிகவும் விரும்புகிறோம். இங்கே இப்போது மருதடிப் பிள்ளையார் ஆலய உற்சவம் ஆரம்பமாகி விட்டது.

இந்தக்கோயில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மரத்தின் கீழ் சிறிய கோயிலாக இருந்தது. மக்களுக்கு நோய்,நொடி துன்பம் என்பன ஏற்படும் போது மக்கள் பிள்ளையாருக்கு காணிக்கைகளை வழங்கி விட்டுப்போவார்கள்.

(பயணங்கள் தொடரும்)

# உள்ளமெலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே...!



கோகுலராகவன்

செல்லம்மா ரீச்சர்.
கிளி / அல்லிப்பளை சீ.சீ.த.க பாடசாலையில் எனக்கு ஆரம்ப வகுப்பு கற்பித்தார்.
"புது ரீச்சர்" என்று பிள்ளைகள் சொன்ன ஞாபகம். அப்போது ஞானப்பிரகாசம் சேர் தலைமை ஆசிரியராக இருந்தார்.
நான் அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு அரிவரி படிக்கச் சேர்ந்தபோது, அங்கு படிப்பித்துக் கொண்டிருந்தார்.
எனக்கு நல்ல ஞாபகம் , அன்றைக்கு ஒரு பச்சை நிற நைலெக்ஸ் சேலை அணிந்திருந்தார். அருகில் இருத்திக்கொண்டார்.
அம்மா போனபின் நான் அழும் போது ஆற்றுப்படுத்தினார்.




ஐந்து வயது நினைவுகளை இப்போது மீட்பது மிகக் கடினமாகவே இருக்கிறது.
ஆனால் அவர் நல்ல உயர் திறன் கொண்ட ஆசிரியை . ஒரு ஆரம்ப ஆசிரியருக்கு இருக்க வேண்டிய அத்தனை திறனும் அவரிடம் இருந்தது.
பாடுவார்.
ஆடுவார்.
பெட்டி இழைப்பார்.
கதிரை பின்னுவார்.
கோலம் போடுவார்.
சித்திரம் வரைவார்.
கதை சொல்லுவார்.
இன்னும் நிறைய.......!

அரவணைப்பு அவரது பாணி.
ஏன் எங்களை அவ்வாறு அரவணைத்து வைத்திருந்தார்? என்பது எனக்கு இன்னும் புரியவில்லை.
அந்தக் கனிவு அவருடன் உடன் பிறந்ததாக?. ஆம், அவர் கனிவாகவே இருந்தார். கனிவைக் குரலில் காட்டுவார். படிப்பில் காட்டுவார். நடையில் காட்டுவார். எதிலும் கனிவு காட்டுவதில் அவர் உச்சம்.
அவர் பாடிய "சின்னஞ்சிறு பூனை"என்ற பாடல் இப்பவும் காதில் ரீங்காரமிடுகிறது.
பூனைபோல்நடந்துகாட்ட, அவர்சேலையை தூக்கி முன்னே செருகி நடிப்பது அருமையாக இருக்கும். அவரிடம் கண்டிப்பு இருந்ததா எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் செயல் ஊக்கியாக இருந்தார்.
எறும்பைக் காட்டி வரிசையாக போக கற்றுத்தந்தார். காகத்தைக் காட்டி ஒற்றுமையைக் கற்று தந்தார்.
தன் அழகிய கையெழுத்துப் போல எங்களுக்கும் எழுதக் காட்டித் தந்தவர்.
அவருடைய கையெழுத்து மிக அழகாக இருக்கும். அதைப் பார்த்து அழகாக எழுதக் கற்றுக்கொண்டோம்.
வாசிக்க விடுவார், அதிலும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டார்
"கண்ணால வாசியுங்கோ"
சிரிப்போம்.
பாவனை செய்து காட்டுவார். இப்போது நானும் அந்த பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதுண்டு. இதுதான் ஆழமான வாசிப்பு என்பது இப்போது புரிகின்றது. எழுத்துப்பிழையின்றி எழுத ,இதுவே முக்கியமான வாசிப்பு முறை. கிரகித்து கொள்வதற்கான வாசிப்பு முறையும் இதுவே. ஆரம்பப் பாடசாலை ஆசிரியரின் கற்பித்தலின் முக்கியத்துவம் மிகப் பிரதானமானது. அவர்கள் இட்ட கோலமே வாழ்வாகிவிடுகிறது.
அத்திபாரம் அல்லவா?
செல்லம்மா ரீச்சர் போட்ட அத்திபாரம் மிகப்பலமானது. உணர்த்தி விட்டுப் போய் விட்டார். பளை நகரில் இருந்து நடந்து வருவார். இரண்டு கிலோமீற்றர் வரும் . கறுப்புக் குடை ,கைவீசின நடை .முகத்தில் சலிப்பு இருக்காது.
சிலவேளை மகனுடன் அல்லது கணவருடன் சைக்கிளில் வருவார்.
அநேகமாக நடைதான்.
பின்னேரம் போகும்போது குடைக்குள் நாலைந்து பூவரசம் இலையை வெயில் சுடாமல் போட்டுக் கொள்வார்.
ரீச்சரின் கணவருக்கு வினாசித்தம்பி என்ற பெயர். ஆகவே ரீச்சர் 'செ.வி.' என முத்தான கையொப்பம் இடுவார்.
"ரீச்சர் செவி எண்டால் காதெல்லோ மாத்துங்கோ" என்று சொல்வோம். சிரிப்பார்.
அதை அவர் மாற்றவில்லை .எப்படி மாற்ற முடியும்? புரியாத வயதுதானே.
1996 இல் நானும் ஒரு ஆசிரியரானேன்.
அப்போது அவர் அங்கு அதிபராகக் கடமையாற்றி கற்பித்துக்கொண்டிருந்தார்.
கூப்பிட்டு வாழ்த்துச் சொன்னார். அவர் முன்னால் அமரவும் சங்கடப்பட்டேன்.
"இரு"
உரிமையோடு சொன்னார்
"நீ பொறுமைசாலி. உனக்கு இந்தப் பணி தான் பொருத்தும்".(என்ன ஞானம் .26 வருடம் முடிந்து விட்டது)
"சரி ரீச்சர்."
பின்னர் இரண்டு தடவை அவரது பாடசாலையில் விளையாட்டு போட்டி நடத்த வரச் சொல்லி போய் இருக்கிறேன்.
அதே கனிவு .
அதே உபசரிப்பு.
காலம் மாற்றாத உயர் குணம்.
அவருக்கு நான்கு பிள்ளைகள் . நன்றாக இருக்கிறார்கள்.
அவரின் குழந்தைகள் நல்லாத்தானே இருப்பினம்.
செல்லம்மா ரீச்சரைப் பற்றி எழுதும் போது மனதில் ஒரு உருக்கம் தோன்றுகிறது.
தாய்மை நினைவு அரவணைக்கிறது.
இதை வாசிக்கும்போது, அவரது மாணவர்களாக நீங்கள் இருந்தால் நீங்களே எழுதியதாக நினைத்து வாசியுங்கள்.
ஏனென்றால் அவர் எனக்கு மட்டும் உரியவரல்லர். அவரது உற்பத்திகள் நிறைய.
காலமாகி விட்டார்.
அஞ்சலிகள் ரீச்சர்.

(இன்னும் கதைப்பம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சி.கதிர்காமநாதன்

# எனது ஊரிலும் தான்... 01



கடை வாசலை அண்மித்த போது 'கிளாக்கர்' என் பெயர் சொல்லி அழைப்பது கேட்டது. தேவதாஸ் வாசலைக் கூட்டிக் கொண்டிருந்தார். நான் மறுபடி திரும்பி றோட்டைக் கடந்து அவரிடம் சென்றேன். காலை எட்டு மணி தானே! சனம் வரத்தொடங்கவில்லை. மினி பஸ்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. கிளாக்கர் சோடாப் போத்தல்களை குளிர்சாதனப் பெட்டிக்குள் அடுக்கிக்கொண்டு என்னைப் பார்த்தார். வயது அறுபதுக்கு மேல் ஆகிவிட்டதன் விளைவு. முதுகில் கூன் அதிகமாக விழுந்தது போல் தெரிந்தது. நடக்கும்போது வலக்காலைச் சாய்த்துச் சாய்த்துத்தான் நடப்பார்.

"என்ன கிளாக்கர் ஐயா கூப்பிட்டியள்?"

"ஒண்டுமில்லை சும்மாதான் கூப்பிட்டனான். வேலைக்கு வாறதெண்டால் சரியான கஸ்ரமாக் கிடக்கு. வீட்டிலை வெளிக்கிட்டு இங்க வாறவரைக்கும் ஆயிரத்தெட்டு செக்கிங். அவங்கள் கதைக்கிறதும் விளங்கேல்லை. அடையாள அட்டை நம்பரைக் கேட்ட உடனை சொல்லச் சொல்லுறாங்கள். நாங்கள் என்ன அந்தப்பெரிய நம்பரைப் பாடமாக்கியே வச்சிருக்கிறம்? அண்டைக்கு வரேக்க இடையில ஏதோ குண்டுச்சத்தம் கேக்க எங்களை மறிச்சு நடுறோட்டில இருத்தி வைச்சுப்போட்டாங்கள். நல்ல வெயில். எனக்குத் தலை சுத்தத் தொடங்கிட்டுது. சிலபேருக்கு நல்ல அடி. ஆனா எங்கட ஆக்களுக்கு அவங்கட பாசையில ஒண்டு பாடமா கிட்டுது. அது என்னடா தம்பி 'சலோ சலோ'!? ஹிந்தி தானே அது? " என்றவாறு என்னைப்பார்த்தார்.

> இரவிலையும் நித்திரையில்லை. நாய் குலைக்கத் தொடங்கினால் இவை தான் ரோந்து போகினம் எண்டு தெரியும். 2 மணியோ, 3 மணியோ எந்த நேரத்திலையும் வாறாங்கள். போகேக்க படலைகளை உதைச்சுப்போட்டு போறாங்கள்.

"ஹிந்தி தான். அவங்களிலை எல்லா மொழிக்காரரும் இருக்கினம் . எனக்கும் ஒரே கரைச்சலாக் கிடக்கு. அடிக்கடி பிடிச்சுக் கொண்டு போய் 'காம்பிலை' வைச்சு விசாரிக்கிறாங்கள். அடியும் போட்டு விடுகிறாங்கள். எங்களுக்குத் தெரிஞ்சால் 'பெடியளைப்' பற்றிச் சொல்லிப்போடவேணுமாம். இரவிலையும் நித்திரையில்லை. நாய் குலைக்கத் தொடங்கினால் இவை தான் ரோந்து போகினம் எண்டு தெரியும். 2 மணியோ, 3 மணியோ எந்த நேரத்திலையும் வாறாங்கள். போகேக்க படலைகளை உதைச்சுப்போட்டு போறாங்கள்.

அண்டைக்கு மாமாவின்ர மகனைப் பிடிச்சுக்கொண்டு போட்டாங்கள். அவன் கையில கத்திவெட்டி, மருந்து கட்டியிருந்தவன். உவங்கள் இவன் சண்டைக்குப்போய்த் தான் காயம் வந்ததெண்டு சொல்லிப்பிறகு இரண்டு நாள் கழிச்சு அடிகாயத்தோடு கொண்டுவந்து போட்டிட்டுப் போட்டாங்கள்"

கிளாக்கர் நீண்ட பெருமூச்சு விட்டார்.

"என்ன தம்பி செய்யிறது? எல்லாம் எங்கட தலையெழுத்து" " கிளாக்கர்! எங்கட வீட்டுக்குப்பக்கத்தில பெரிய 'காம்ப்'. எப்ப பாத்தாலும் வீட்டச்சுத்தி அவங்கள் தான். பெரியாக்கள் நிண்டாப் பிரச்சினை இல்லை .அவை இல்லாத நேரம் கரைச்சல் தான். ......"

சட்டென்று பேச்சை நிறுத்தினேன். பச்சை நிறத்திலே கனரக வாகனங்கள் றோட்டில் விரைந்து சென்றன.

" சரி கிளாக்கர் . முதலாளி வாறார். 'பாங்கிலை' வேலை இருக்கு. நான் வாறன்"

"உனக்கென்ன இன்னும் கொஞ்சநாளைக்குதானே இங்க வேலை " நான் குழப்பத்துடன் அவரைப் பார்த்தேன்.

"என்ன தம்பி உனக்கு விஷயம் தெரியாதோ? உன்ரை முதலாளியின்ர மகன் உன்னை இந்தியாவுக்குக் கூட்டிக் கொண்டு போறார். அண்டைக்கு என்னோட கதைச்சவர். பிறகு இதைப்பற்றிக் கதைக்கலாம். நீ இப்ப அவரோட போட்டு வா"

"கிளாக்கரையா சாப்பாடு முடிஞ்சுதா. காலையில நீங்கள் சொன்னபிறகு முதலாளியின்ர மகன் என்னோட கதைச்சவர். அங்க அவையின்ர பால் கொம்பனியைப் பாக்க ஆளில்லையாம். கொஞ்சக்காலம் என்னை வந்து நிக்கட்டாம். எனக்கென்னவோ இதிலை விருப்பமில்லை. "



"என்னடா தம்பி . இவங்கள் அமைதிகாக்கவெண்டு வந்து. சண்டையில தொடங்கி இப்பிடி அழிவு வருமெண்டு நாங்களெல்லாம் நினைச்சிருப்போமோ? இந்தச் சண்டைக்குப் பிறகு தானே எத்தனையோ பேர் வெளியால ஓட வெளிக்கிட்டு இருக்கினம். இன்னும் இவங்கள் இருப்பாங்களோ? போவாங்களோ அல்லது இது மாதிரிச் சண்டை வருமோ? கடவுளே! அதுசரி. நீயேன் இப்பிடிக் கிடந்து கஷ்டப் படவேணும்? கொஞ்சக்காலத்துக்குப் போய் உழைச்சுக்கொண்டு வாவன். உன்ரை குடும்பமும் பெரிய குடும்பம் தானே. கனக்க யோசிக்காதை. "

"கஷ்டம் துன்பம் வந்தாலும் சொந்த இடம். சொந்த மண் அழுதாலும் சிரிச்சாலும் நாங்கள் தான். வீட்டிலை சொன்னா சந்தோசப்படுவினம் 'உனக்காவது இந்தியா போகச் சந்தர்ப்பம் கிடைச்சதே' எண்டு."

சற்றுநேரம் இருவரும் ஒன்றும் பேசவில்லை.

" என்ன யோசினை வேண்டிக்கிடக்கு? உதிலை பக்கத்தில இருக்கிற நாட்டுக்குப் போறதுக்கு."

" எனக்கு என்ன முடிவு எடுக்கிறதெண்டு தான் யோசினையாக்கிடக்கு. என்னதான் பக்கத்து நாடெண்டாலும் முன்பின் பழக்கமில்லாத இடம் தானே." " முன்பின் பழக்கமில்லாத இடமெண்டாலும் நீ வேலை செய்யப்போறது தமிழ்நாடு தானே. பிறகென்ன பயம்."

கிளாக்கர் என்னை எப்படியும் அனுப்பிவிடுகின்றதென்ற முடிவில் உற்சாகமாகப் பேசிக்கொண்டு போனார். அவர் சொல்வதிலும் உண்மை இல்லாமலில்லை. "எங்கள் மொழி கதைக்கிற சனம் தானே. பிரச்சினை இல்லை. அங்கை போய் வந்தவையும் கனக்கச் சொல்லியிருக்கினம். எங்களுக்குத் தாய் வீடு அது தானே பிறகென்ன பயம்?"

கதையில் மூழ்கிவிட்டதால் சோடா வாங்கவந்தவர்களை மறந்துவிட்டோம்.

"சரி சரி. கிளாக்கரையா, சனம் வந்துட்டுது. இண்டைக்கு ஆறுமணிக்குத் தானே ஊரடங்குச் சட்டம் எண்டு கதைக்கினம். எங்களுக்கென்ன அஞ்சுமணிக்கே வெளிக்கிட வேண்டியது தான். அவங்கள் தேடுதல் நடவடிக்கை எண்டு ஒவ்வொரு பகுதியாயெல்லே ஊரடங்குச்சட்டம் போடுறாங்கள்"

" நீ வழக்கம் போல என்னோட வந்திடு. ஏதோ கொஞ்சத் தூரம் தன்னும் உன்னோட பாதுகாப்பா வந்திட்டு நானும் என்ர வழியிலை போயிடுறன். "

கிளாக்கர் வியாபாரத்தில இறங்கிவிட்டார்.

(தொடரும்)

## கடவுளின் பகடை



மண்ணில் இருந்து வந்தது
மண்ணுக்கே செல்கிறது
அன்னமிட்ட மண்
எடுத்துக்கொள்கிறது கொடுத்ததனைத்தையும்
உயிர்ப்பிக்க வரும் தேவன்
எடுத்துச்செல்ல ஒன்றும் இல்லை
இறைஞ்சி நிற்கும் கடவுளிடம்
கையளிக்கிறது மண்
தான் உறிஞ்சிய அனைத்தையும்
பெற்றதைக்கொண்டு
அவர் நிர்மாணிக்கிறார்
சொர்க்கத்தையும் நரகத்தையும்
அங்கே சுற்றித்திரிகிறார்
ஐன்ஸ்டைன், மூளையில்லாமல்

- ராஜா நடேசன்

## முகநாடகம்

சரியாக அணிந்துகொள்ளவில்லை
என்பதான திரள் உணர்வினால்போல
முகக்கவசத்தை மெல்ல அவிழ்த்து
மீண்டும் போட்டுக்கொள்வதாய்
ஒரு தருணத்தை அமைத்து
எதிரே கடக்கப்போகும்
எனக்குன் தளிர் முகத்தை
காண்பித்து மறைத்த
உன் குறுநாடகம்
கொரோனாவின் பின்புலமின்றி
சாத்தியமாகியிருக்குமா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தமிழர் தரப்பு உருப்படியாக எதுவும் செய்வதில்லை

# இம்முறையும் சிறிலங்காவுக்கு கால அவகாசத்தை ஐ.நா. கொடுக்கும்!

**தளங்களில் தமிழர்களின் உரிமைக்காக பல வருடங்களாக , சர்வதேசத் தளத்தில் தொடர்ச்சியாக பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் மனித உரிமைச் செயற்பாட்டாளரும், தமிழர் இயக்கத்தின் சர்வதேச இணைப்பாளருமான பொஸ்கோ, 'உதயன்-சஞ்சீவி' வாசகர்களுக்காக இணையம் மூலம் வழங்கிய செவ்வி இது.**

○ இணையவழி நேர்காணல்:
த.பிரஸ்நோவ்

**கே:** இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரில் தமிழர்களின் பிரச்சினைகள், இறுதிப்போரில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் கரிசனை காட்டப்படுமா? அல்லது தென்னிலங்கையில் தற்போது இடம்பெறும் கைதுகள், கருத்துச் சுதந்திர ஒடுக்குதல்கள் தொடர்பில் மனித உரிமைகள் பேரவை அதிகளவு அக்கறை செலுத்துமா? எதற்கு வாய்ப்பு அதிகம்?

**ப:** ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பான விவகாரம் ,பிரிவு 2இன் கீழ் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி தமிழர்களின் இனவழிப்பை மூடிமறைக்கும் வகையில் சிறிலங்கா அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. அந்தவகையில் இந்தக் கூட்டத்தொடரில் , சிறிலங்காவில் உருவாக்கப்பட்ட பொருளாதார நெருக்கடி, காலிமுகத்திடல் போராட்டம் , அதை அடக்கும் விதமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்பவற்றைப் பூதாகரமாக்கி தமிழின அழிப்பை மூடிமறைக்கும் வகையிலான செயற்பாடுகளையே அரசாங்கமும் சிங்கள சிவில் அமைப்புகளும் ஐ.நா. வில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றன.

அந்தவகையில் காலிமுகத்திடலில் தனிநபர்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் குறித்த 850 க்கு மேற்பட்ட அறிக்கைகளை ஐ.நா .மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் விசேட பிரதிநிதிகள் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சிங்கள= சிவில் அமைப்புகள் அனுப்பி வைத்திருந்தன.

குறிப்பிட்ட அறிக்கைகள் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் தமது துறைசார்ந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கும் ஐ.நா. வின் விசேட பிரதிநிதிகளுக்கான தரவுகளாக அமையும். இந்த விசேட பிரதிநிதிகளின் அறிக்கைகளில் உள்ள விடயங்களே, ஆணையாளரின் அறிக்கையிலும் தாக்கம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது. வழமை போன்று தமிழர் தரப்பினராகிய நாம் உரிய செயற்பாடுகளை உரிய காலத்தில் முன்னெடுக்காமால், ஐ.நா. விடம் இருந்து பலமான அறிக்கைகளை எதிர்பார்க்க முடியாது.

அதனடிப்படையில் தற்போதைய சூழலில் பல நாடுகளும், சிறிலங்காவின் புதிய அரசாங்கத்தை வரவேற்பதுடன் அதற்கு வலுச்சேர்க்கும் அறிக்கைகளும் தீர்மானமும் அமையும். அத்துடன் மீண்டும் இரண்டு வருட கால அவகாசத்தை சிறிலங்கா அரசாங்கத்துக்கு வழங்குவார்கள். அதற்கான சந்தர்ப்பங்களே அதிகம்.

**கே:** அப்படியானால் ஜெனிவாவில் இம்முறை புதிதாக வரவிருக்கும் தீர்மானம் என்னென்ன விடயங்களை உள்ளடக்கி இருக்கும்?

**ப:** கடந்த தீர்மானங்களைப் போன்றே இந்தத்தீர்மானமும் பாதிக்கப்பட்ட தமிழர்களின் விடயங்களை மறைத்து ஆட்சிமாற்றத்தை வரவேற்று கடந்த தீர்மானங்களில் முன்மொழியப்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசுக்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம் மீண்டும் நீடிக்கப்படும். அத்துடன் 46/1 தீர்மானத்தில் முன்மொழியப்பட்டதன் அடிப்படையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்தின் சாட்சியங்களைச் சேகரிக்கும் குழுவுக்கான புது பாதீடு( budget ) ஒதுக்கப்படும்.

மேலும் மேற்கத்தேய நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ,சர்வதேசத்தை ஏமாற்றும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றை நீக்குவதாகவும் , காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை வழங்குவதாகவும் ஒரு நாடகத்தை ரணில் அரசாங்கம் அரங்கேற்றத் தொடங்கியுள்ளது. சிறிலங்கா அரசின் இந்தக் கபட நாடகம் வரவிருக்கும் தீர்மானத்தின் வரைவில் நற்செயலாகக் குறிப்பிடப்படும். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் மேற்குலக நாடுகளின் ஊடகப்பேச்சாளராக செயற்படும் குறிப்பிட்ட அரசியல்வாதியும் ,தனது ஊடகப் பேச்சாளர் பணியை தமிழர்கள் மத்தியில் முன்னெடுக்கத் தொடங்கிவிட்டார்.

கடந்த பத்து வருட காலமாக ஐ.நா வில் சிறிலங்கா தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகளே எழுதுகின்றன. அவர்கள் ஆரம்பத்தில் தீர்மானத்தின் வரைவை எழுதும் போதே இனவழிப்பால் பாதிக்கப்பட்ட தமிழர்களை வெளிப்படுத்தாத வகையில்நலிவானவரைவையேஎழுதிமுன்வைக்கின்றனர். அந்தவகையில் சிறிலங்காவில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனவழிப்பை ஏற்றுக்கொள்ளாமலும் அதற்கான சர்வதேச விசாரணையை வலியுறுத்தாமலும் ,இனப்பிரச்சினைக்கான தீர்வை சிறிலங்காவின் உள்ளகப் பொறிமுறைக்குள் முடக்குகின்றனர். ஆனால் சிரியா, பெலாருஸ், ரோஹிங்கியா வரிசையில் தற்போது உக்ரைன் போன்ற நாடுகளில் நடைபெறுவது இனவழிப்பு என குறிப்பிட்டு பேசுகிறார்கள். குறிப்பாக உக்ரைன் விவகாரத்தில் போர் தொடங்கி ஐந்து நாட்களுக்குள்ளாகவே அதுவொரு இனவழிப்பு என பிரித்தானியாப் பிரதமர் விளித்துக் கூறினார். ஆனால் ஐ.நா. வின் அறிகையின்படி சிறிலங்காவில் இறுதிப் போர்க் காலப் [illegible] வரையில் [illegible] கூறப்பட்டுள்ள நிலையிலும், 13 வருடங்களாக பிரித்தானியா அரசின் வாய்மூல அறிக்கைகளிலோ அல்லது முன்மொழியும் தீர்மானங்களிலோ இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்படவில்லை. இவற்றைப் பார்க்கும் போது சிறிலங்கா அரசை பாதுகாப்பதற்கே பிரித்தானியா முன்னின்று செயற்படுவதைக் காண முடிகிறது.

### தமிழர் பிரச்சினையை திசை திருப்புவதில் சிங்கள சிவில் அமைப்புகள் தீயாக வேலை செய்கின்றன

**கே:** ஆணையாளரின் அறிக்கை சிறிலங்காவை நெருக்கடிக்குள் தள்ளவேண்டுமானால் தமிழர் தரப்பு என்ன நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்?

**ப:** ஆணையாளரின் அறிக்கைகள் பலமானதாக அமையவேண்டுமாக இருந்தால், ஐ.நா. வின் அனைத்துப் பொறிமுறைகளையும் சரியான வகையில் உள்வாங்கி காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். குறிப்பாக பாதிக்கப்பட்ட தரப்புகள் ஐ.நா வின் சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்த அமைப்புகள் (treaty bodies) ஆகியவற்றுக்கு , சிவில் சமூக அமைப்புக்களும் தனிப்பட்ட நபர்களும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் முறைப்பாட்டு அறிக்கைகளை அனுப்பிவைக்க வேண்டும். ஏனெனில் ஆணையாளரின் அறிக்கைக்கான தரவுகள் ஐ.நா. வின் சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளின் அறிக்கைகளிலிருந்தே திரட்டப்படுகின்றன. அந்தவகையில் கடந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற கூட்டத்தொடரில் வெளிவந்த ஆணையாளரின் அறிக்கை தமிழர்களான எமக்கு சற்று ஆறுதலாக அமைந்திருந்தது. அதில் - ஐ.நா. வின் அறிக்கைகளில் - சிறிலங்காவில் தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கு காரணம் கடந்த 2020 ஆம் ஆண்டு முழுவதும் ஈழத்தில் தமிழர்கள் எதிர்நோக்கிய வன்முறைகள் தொடர்பில் 350 க்கும் மேற்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகளை மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் பெற்று , உலகத் தமிழர் இயக்கத்துடன் இணைந்து செயற்படும் ஐ.நா. வின் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளினூடாக மேலே குறிப்பிட்ட பொறிமுறைகளில் வழக்குகளாகப் பதிவுசெய்ததே ஆகும்.

மேலும் எமது பிரச்சினை தொடர்பில் முதன்முறையாக ஐ.நா. வின் சிறப்பு அறிக்கையாளர்கள் ஒன்றிணைந்து கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. ஆனால் இம்முறை நாம் பலதடவைகள் எடுத்துக்கூறியும் தாயகத்தில் இருந்து பாதிக்கப்பட்ட தரப்புகள் மற்றும் சிவில் சமூகத்தினரிடம் இருந்தும் எவ்வித அறிக்கைகளும் எமக்கு கிடைக்கவில்லை. ஆனால் சிங்கள மற்றும் முஸ்லிம் தரப்பினரால் வழமை போன்று பல அறிக்கைகள் ஐ.நா.வின் பொறிமுறைக்குள் தொடர்ந்தும் பதிவேற்றப்பட்டுக் கொண்ருக்கின்றன.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனடிப்படையில் இம்முறை வெளிவரும் ஆணையாளரின் அறிக்கையிலும் சிறிலங்கா முழுவதும் பிரச்சினை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுவதுடன் ஆட்சிமாற்றத்தினை நற்செயலாக குறிப்பிட்டு காலிமுகத்திடல் போராட்ட வன்முறைகளை 'செல்லமாக' கண்டிக்கும் வகையிலான, சிங்களத்தரப்புக்கு ஆதரவான ஒன்றாகவே காணப்படும். அதே வேளை தமிழர்களின் இனவழிப்பை இருட்டடிப்புச் செய்து தமிழர்களின் நீதிப்பொறிமுறையை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலும் அது அமைந்திருக்கும் என ஊகிக்கலாம். இவற்றைக் கடந்து ஆணையாளரின் அறிக்கை மிகவும் பலமானதாக வெளிவருவது என்பது தமிழர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. தமிழர் உரிமைச் செயற்பாட்டாளர்களும், அமைப்புக்களும் வருடத்தில் வெறுமனே ஓரிரு கோரிக்கை மனுக்களை அனுப்புவதுடன் மட்டும் நிற்காமல் அதற்கான அறிக்கைகளை ஐ.நா. வின் சிறப்பு அறிக்கையாளர்கள் (Special Procedures) மற்றும் ஒப்பந்த அமைப்புக்கள் (Treaty Bodies) ஆகியவற்றுக்கு எம்மால் முடிந்தளவு அதிகமாக அறிக்கைகளை தொடர்ச்சியாகச் சமர்ப்பிக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் அறிக்கைகளின் தொகுப்பாகத்தான் ஆணையாளரின் அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

**கே:** ஐ.ந. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் தீர்மானிக்கப் பட்ட 'சாட்சியங்களைச் சேகரிப்பதற்கான அலுவலகம் 'இன்னமும் சிறிலங்காவில் திறக்கப்ப டவில்லையே?

**ப:** சாட்சியங்களைச் சேகரிப்பதற்கான அலுவலகத்தை சிறிலங்காவில் திறப்பதாக 46/1 தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை. அதில் சாட்சியங்களை சேகரிப்பதற்கான ஒரு குழு உருவாக்கப்படும் என்றே குறிப்பிடப்பட்டது.

அந்தக் குழு பல்வேறு நாடுகளிலும் வாழும் பாதிக்கப்பட்டவர்களிடம் சாட்சியங்களைச் சேகரிக்கும் பணியை ,46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சிறிது காலத்தில் இருந்து முன்னெடுத்துவருகின்றது.

எமக்குக் கிடைத்த தகவல்களின்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் (OHCHR) விசாரணைக் குழுவுக்கு கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் அமைப்புகள் மற்றும் சிறிலங்கா இராணுவத்தின் பினாமி அமைப்புகள் ஊடாக தமிழர்களுக்கு எதிரான முறைப்பாடுகளே அதிகமாகப் பதியப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தடையை தொடர்ந்து நீடிப்பதற்கு எவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தில் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்களோ அவ்வாறே ஐ.நாவிலும் அதன் பொறிமுறைகளை உள்வாங்கி, சிங்கள சிவில் அமைப்புகளும், இராணுவ அமைப்புகளும் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இவ்விடயத்தில் தமிழர்களை வைத்து பிழைப்பு நடத்தும், மறைமுகமாக சிங்கள சிவில் அமைப்புகளுடன் தொடர்பில் உள்ள வெள்ளைக்கார அமைப்பு ஒன்று இந்த விசாரணைக் குழுவுக்கு அனுப்புவதற்காக தமிழர்களிடம் ஆதாரங்களைச் சேகரிக்கும் வேலையை கடந்த சில மாதங்களாக முன்னெடுத்துவருகின்றது.

அதற்கும் தமிழர்களிடம் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இருந்த போதிலும் சொற்ப ஆதாரங்கள் குறிப்பிட்ட சில தமிழர்களால் அந்த வெள்ளைக்கார அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை தமிழ் அமைப்புகள் ஊடாக முன்னெடுக்கும் போது ,அவற்றுக்கு அங்கீகாரம் கிடைப்பதுடன் ,தமிழரின் இறையாண்மையும் பாதுகாக்கப்படும்.

**கே:** மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராக சர்வதேச நாடுகள், தங்களின் நாடுகளில் வழக்கு விசாரணைகளை மேற் கொள்ளல் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகளை விதித்தல் போன்றவற்றைச் செய்ய முன்வரவேண்டும் என ஆணையாளரால் கூறப்பட்ட போதும், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை, சிங்கப்பூரில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க அந்த நாட்டின் சட்டமா அதிபர் தரப்பு விரும்ப வில்லை . ஏனைய நாடுகளும் இதேபோக்கை கடைப்பிடிப்பது ஏன்?

**ப:** முதலில் பாதிக்கப்பட்ட தரப்பினராகிய நாங்கள்தான் அதற்கான முன்னெடுப்புகளைச் செய்யவேண்டும். அந்தவகையில் அந்தந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் சர்வதேசக் குற்றங்களுக்கான பிரிவுகளின் கீழ் அரசதரப்பு சட்டத்தரணிகளின் ஊடாக வழக்குகளை பதிவுசெய்யவதன் மூலமே விசாரணைகளை மேற்கொண்டு தனிநபர்கள் மீதான தடைகள் விதிக்கப்படும். இவ்விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்பாகிய நாம் எந்த நகர்வுகளையும் முன்னெடுக்காது சர்வதேச நாடுகள் தாமாக தனிநபர்கள் மீதான தடையை விதிக்குமென எண்ணுவது அபத்தமானதே.

**கே:** தமிழ்த் தேசியக் கட்சிகளின் கடிதங்கள், பொது அமைப்புக்களின் கடிதங்கள் என்பன இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்தக் கடிதங்கள் எவ்வகையான தாக்கங்களை உருவாக்கும்?

**ப:** தனியே கடிதங்கள் அனுப்புவதாலும் ,ஊடக அறிக்கைகளை வெளியிடுவதாலும் மட்டும் எதனையும் மாற்ற முடியாது. இவற்றைத் தாண்டி பாதிக்கப்பட்ட தரப்புக்களின் குரல்கள் ஐ.நா.வுக்குள் ஒலிக்க வேண்டும். அந்தவகையில் தமிழ்மக்களாகிய நாம். இதுவரை காலமும் வெறுமனே கூட்டத்தொடரை மட்டுமே முதன்மைப்படுத்தி வேலை செய்கிறோம். அதிலும் கூட்டதொடரி னைப் பொறுத்தமட்டில் . தனியே அதன் பொறிமுறைகளுக்குள் அங்கு வந்து நின்று பேசிவிட்டுப் போவதில் பிரயோசனமில்லை. அங்கு எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமோ அதனை முன்னெடுக்க வேண்டும். ஐ. நா.வின் பொறிமுறைக்குள் ,முதலில் பாதிக்கப்பட்ட தரப்பினர் தமது பாதிப்புக்களை தெரியப்படுத்த வேண்டும்.

பக்க அறை நிகழ்வு களைச் செய்ய வேண்டும், வாய்மூலமான அறிக்கைகளை வழங்க வேண்டும் ,எழுத்துமூல அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

அதனோடு மட்டும் நிற்காது அவற்றினை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் மத்தியில் கொண்டு போய்ச் சேர்ப்பதிலேயே வெற்றி அடங்கியிருக்கிறது. இவை எதனையும் செய்யாது தனியே நாங்கள் ஒன்றிணைந்து அறிக்கை மாத்திரம் விடுவதனால் எவ்வித பிரயோசனமும் இல்லை. அத்தோடு இந்த உப்புச்சப்பற்ற கடிதங்களை எழுதுவதையும், இங்கு வந்து பேசிவிட்டுப் போவதையும் மக்களுக்குக் காட்டி ' நாம் இராஜதந்திரிகளுடன் வேலை செய்கின்றோம் 'என்ற தவறான கருத்துருவாக்கத்தை தமிழர்கள் மத்தியில் எம்மவர்கள் சிலர் உருவாக்குகிறார்கள்.

இதேவேளை, சிங்கள அமைப்புகள் ஐ.நா. வின் பொறிமுறைகளைச் சரியாக பயன்படுத்தி வேலை செய்வதால், சிறிலங்காவில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பது கூட ஐ.நா வின் அறிக்கைகளில் மூடிமறைக்கப்படுகின்றது. தமிழ்த்தேசியக் கட்சி சார்ந்தவர்கள் முதலில் ஒரு அறிக்கைக்கான பொறிமுறையை முன்னெடுக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு நாளும் புதிய தரவுகளை பதிவேற்றிக்கொண்டே இருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு விசேட பிரநிதி களுக்கும் அன்றாடம் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தெரியப்படுத்த வேண்டும்.

இப்போது இருக்கும் சூழலில் தமிழர்கள் இருக்கின்ற பொறிமுறைகளையே சரிவரப் பயன்படுத்தவில்லை. அதனால் தான் விசேட பிரதிநிதிகளுக்கோ, ஐ.நா வின் உப கட்டமைப்புக்களுக்கோ (ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 44 விசேட பிரதிநிதிகளும் 9 உப பிரிவுகளும் இருக்கின்றன .அதில் 170 வரையான வல்லுநர்கள் இருக்கிறார்கள்) நாங்கள் தகவல்களை அனுப்பிக்கொண்டிருந்தால் தான். அவர்கள் தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன எனப் பேசத் தொடங்குவார்கள்.

அந்தக் குறைபாடுகளை தமிழர் தரப்பு இல்லாமல் செய்ய வேண்டும். அதனைவிடுத்து வெறும் கோரிக்கைகளுடன் நிற்காமல் ,பாதிக்கப்பட்ட தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்வதற்கும் உரியவர்கள் முன்வர வேண்டும். அவ்வாறு முன்வந்தாலேயே எங்களுடைய செயற்பாடுகளை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலகுவாக முன் நகர்த்தலாம்.

ந.பரமேஸ்வரன்



# கோத்தா வருவதற்கு துணைபோகலாமா?

'கோத்தாவை திரும்ப அழைத்து வருவதற்குத்துணை போகாதீர்கள்' இது அரகலய போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற முன்னணி சர்வதேச ஊடகமொன்றில் கடமையாற்றும் சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் . இந்தக் கட்டுரையாளருடன் பகிர்ந்துகொண்ட விடயம். நான் இங்கு அவரது பெயரையோ ,கடமையாற்றும் நிறுவனத்தையோ, தற்போது தங்கியுள்ள நாட்டையோ குறிப்பிட விரும்பவில்லை. ஏனெனில் சில .வேளை அவரும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படலாம்.

அவர் மேலும் கூறுகையில் 'இப்போது கோத்தா நாட்டை விட்டுத் தப்பியோடிவிட்டார். இந்த நேரத்தில் புலம்பெயர் தமிழர்களும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமும் மௌனம் சாதிப்பதே நல்லது. ஏனென்றால் புலம்பெயர் தமிழர்களும் ,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமும் கோத்தாவை கைது செய்ய வேண்டும் என்ற பிரசாரத்தை சர்வதேசரீதியில் முன்னெடுத்தால் அது கோத்தாவின் ஆதரவாளர்களுக்கு சாதகமாக அமைந்துவிடும். அவர்கள் இதை வைத்தே கோத்தாவை நாட்டுக்கு அழைத்து வரும் முயற்சியில் இறங்கிவிடுவார்கள் .எனவே இந்த நேரத்தில் புலம்பெயர் தமிழர்களும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கமும் மௌனம் சாதிப்பதே நல்லது.' எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

'கோத்தாவை திரும்ப அழைத்து வரும் முயற்சியில் அவரது ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அரகலய போராட்டக்காரர்கள் கோத்தாவை நாட்டினுள் கால் பதிக்க அனுமதிக்க மாட்டோம் என்பதில் உறுதியாகவுள்ளனர். ஆனால் கோத்தா எப்படியும் திரும்பி வருவார்; அவர் வேறு நாடுகளுக்குச்செல்ல முற்படும் சந்தர்ப்பத்தில் தான் கைது செய்யப்படலாம் என்ற அச்சமும் கோத்தவிடம் இருக்கிறது. எனவே அவர் எப்படியும் இலங்கைக்கு திரும்பி வருவதற்குத்தான் முயற்சிப்பார். அவ்வாறு திரும்பி வரும் சந்தர்ப்பத்தில் கட்டுநாயக்காவில் அரகலய போராட்டக்காரர்களுக்கும் ,கோத்தாவின் ஆதாரவாளர்களுக்குமிடையே பெரும் கலவரம் வெடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. எனவே சிங்களவர்கள் கஷ்டப்பட்டு துரத்திய கோத்தாவை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தமிழர்கள் துணை போய் விடாதீர்கள்; 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் ரணிலை தோற்கடிப்பது என எடுத்த தீர்மானத்தைப்போல் நீங்கள் இம்முறை தவறிழைத்து விடாதீர்கள் 'என்றும் அவர் சொல்லத் தவறவில்லை.

தற்போது நடைபெற்று வரும் செயற்பாடுகளைப் பார்த்தால் எமது அதிமேதாவிகள் இன்னும் திருந்தவில்லை. தாங்கள் முட்டாள்கள் என்பதையே நிரூபித்து வருகிறார்கள். வரலாற்றிலிருந்து பாடம் கற்கத்தவறினால் நாம் இன்னும் அதலபாதாளத்தில் வீழ்வதை எவராலும் தடுக்க முடியாது. எங்களை நாங்களே யூதர்களுக்கு நிகரானவர்கள் என்று சொல்லி சுயதம்பட்டம் அடித்துக்கொண்டு அழிந்து போவதை எவராலும் தடுக்க முடியாது. தமிழர்கள் என்னதான் தாங்கள் அதிமேதாவிகள் என மார்தட்டிக் கொண்டாலும் , 'இராஜதந்திரம் என்றால் கிலோ என்ன விலை?' என்று கேட்கும் நிலையில் தான் எமது தமிழ் அரசியல்வாதிகள் செயற்பட்டு வந்துள்ளனர். சுதந்திர இலங்கையின் வரலாறும் இதைத்தான் எடுத்துக்காட்டுகிறது. தமிழர்களுக்கு சார்பாகச் செயற்படுகின்றவர்களை சிங்கள மக்கள் நிராகரித்து வந்ததே இலங்கையின் வரலாறாக காணப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் சமசமாஜிகள் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து வந்தனர். அப்போது சிங்களப் பேரினவாதிகளால் "சமசமாஜி பாஷாதுரோகி தோசே வடே அப்பிட்ட எப்பா" என்ற பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் சேர். ஜோன். கொத்தலாவலை தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து என அறிவித்தபடியால் தான் , ஐக்கிய தேசியக்கட்சியால் அப்போது எதிர்க்கட்சியாக கூட வர முடியவில்லை. 2009 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யுத்தத்தை முன்னின்று நடத்திய தளபதியும் தமிழர்களை வந்தேறு குடிகள் என சண்டே லீடர் பத்திரிகைக்கு செவ்வி வழங்கியவருமான சரத் பொன்சேகாவை ஆதரித்து மஹிந்தவை வெற்றி பெறச்செய்தனர். 2019 ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் விக்கினேஸ்வரன் , ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ,முன்னாள் போராளிகள் அனைவரும் இணைந்து திருநெல்வேலி பெரிய ரியூட்டரி பெடியளின் நாணயக்கயிற்றினுள் நின்று 13 அம்சக்கோரிக்கையை முன் வைத்து, கோத்தாவை 69 இலட்சம் தனிச் சிங்கள வாக்குகளால் வெற்றி பெறச்செய்தனர்.

கோத்தாவை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்த வேண்டுமென வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்; இதே போல் பிரித்தானிய தமிழர் பேரவையும் கோத்தாவை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினர் பாவம் அவர்களை விட்டு விடுவோம் அவர்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் ,பொறிமுறை என்பன பற்றிய போதிய அறிவு இல்லாதிருக்கலாம்.

நுனி நாக்கு ஆங்கிலத்தில் , பி.பி.சி.உலக சேவைக்கு செவ்வி வழங்கும் சுரேன் சுரேந்திரனுக்கு கூடவா அரசியல் தெளிவு இல்லாமல் போனது? அல்லது 2019ல் விக்கினேஸ்வரனும் சுமந்திர னும் தமிழர்களை ஏமாற்றியது போல் சுரேன் சுரேந்திரனும் நாடகமாடுகிறாரா ? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

சிங்கள ஊடகவியலாளர் சொன்ன விடயத்தையும் சற்று கவனத்தில் எடுங்கள். இப்பொழுதே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றி எந்த விதமான ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் இடம்பெறாத நிலையில் கூட, 'இனிமேல் சிறையிலுள்ள புலிகள் நாட்டினுள் சுதந்திரமாக நடமாடப்போகிறர்கள் ?'என ஆங்கில பத்திரிகை ஒன்று எழுதியுள்ளது. விமல் வீரவன்ஸ போன்ற இனவாதிகளும் அரசியல்கைதிகளின் விடுதலைக்கு எதிராக போர்க்கொடி தூக்க ஆரம்பித்து விட்டனர் என்பதையும் நினைவில் வைத்திருங்கள்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் என்ன மல்லாகத்திலிருந்து அளவெட்டி செல்லும் பாதையிலா உள்ளது? ஐயா சுரேந்திரன் அவர்களே ! நீங்கள் உண்மையில் ஏதாவது செய்ய விரும்பினால் தயவு செய்து வாயை பிளாஸ்டரால் ஒட்டிக் கொண்டு செய்யுங்கள்; காணாமல் ஆக்கப்பட்டோரின் அம்மாமாரே உங்களது வலி எமக்குப்புரிகிறது. நீங்களும் ஊடகங்களுடன் மட்டும் பேசுவதை நிறுத்தி விட்டு ஏதாவது ஆக்கபூர்வமாகச் செய்யுங்கள்; மாறாக சிங்களவர்கள் துரத்திய கோத்தாவை அழைத்து வருவதற்கு துணை போகாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org